கலைமகள் வாசகம்

இரண்டாம் புத்தகம்

பாகம் 2

கலைமகள் வாசகம்

இரண்டாம் புத்தகம்

(இரண்டாம் பாரத்திற்கு)

THE MADURA TAMIL

ஆக்கியோர்:

புலவர். சரவண. ஆறுமுக முதலியார் M.A., B.O.L., L.T.

ஆசிரியர் கல்லூரி, சென்னை.

பாகம் II

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி,

நுங்கம்பாக்கம் :: சென்னை.

பதிப்புரிமை] 1951 [விலை ரூ. 1

First Impression—1951.

THE MADURA TAMIL SANGAM

PRINTED AT SARASUBAI PRESS, MADRAS-1.

உரிமை உரை

எதிர்காலத் தமிழகத்தின் தனிப்பெருந் தலைவர்களாகவும், குடி மக்களாகவும் வரப்போகும், நிகழ்காலத் தமிழ் மாணவ மணிகளுக்கு இப்பாடநூல் உரியதாகுக.

முன்னுரை

ஆழ்ந்தபடிப்பு, அகன்றபடிப்பு, என்று இருவகைப்படுத்தக் கூடிய மொழிப்படிப்பில், பாட நூல்கள் (Detailed texts) ஆழ்ந்து படித்தற் குறியவை. துணைப்பாட நூல்களிற்போல், (Non-Detailed texts) மேலெழுந்த வாரியாக, நுனிப்புல் மேய்ந்து படிக்காமல், ஆழ்ந்து நுட்பமாகச், சுவைத்துப் படித்தற் குரியன இவை. இந் நூல்கள், பொதுவாக, மொழி அறிவை வளர்ப்பதோடு, சிறப்பாக, இலக்கியச் சுவை உணர் ஆற்றலை உண்டு பண்ணி, அதை வளர்த்து, இலக்கியப் பற்று தாய்மொழிப் பற்று, தாய்நாட்டுப் பற்றுகளையும், நல்லொழுக்க, சமய, உணர்ச்சிகளையும் விளைவித்து, பள்ளிக்கூடங்களை விட்டு மாணவர் அகன்ற பின்னரும், வாழ்நாள் முழுவதும், இவை நிலைத்திருக்குமாறு செய்ய வேண்டும்.

அங்ஙனம் படித்தால், முன் கூறியவற்றை அடைந்து, பாடப் பகுதிகளிற் காணலுறும் சொல், பொருள் நயங்களை உய்த்துணர்ந்து இன்புறும் வழக்கத்தையும் பெறுவர். மேலும் இவற்றின் வழியாய், இவற்றின் துணைகொண்டு, பாடங்களில் வரும் தலைவன், தலைவியர் முதலிய பல மக்களின் இயல்புணர்தலும், அவற்றிற் பயிலும், இலக்கணக் குறிப்புகள், அரிய சொல்லாட்சிகள், சொற்றொடர், மரபுத் தொடர்கள் முதலியவற்றை அறிந்து, அவற்றை, "முன்னோர் மொழி பொருளேயன்றி, அவர் மொழியும் பொன்னேபோற் போற்றுவம்" என்னும் தமிழ் மரபுக்கு ஏற்ப தம் பேச்சிலும் எழுத்திலும் வைத்து வழங்குவதற்குரிய பன்முறைப் பயிற்சியும், (Drill), பிழையறவும், தெளிவாகவும், கோவையாகவும், எளிய, இனிய, தூய நடையில் குறித்த ஒரு பொருள்பற்றி எழுதவும், பேசவும், கருத்துவளம், சொற்களஞ்சியம்

(Vocabulary) முதலியன உறுதி பெறவும், ஒரு பத்தியில் [paragraph) வரும் பொருளைச் சுருக்கமாக அறிந்து கொள்ளவும், காரண, காரியத் தொடர்பு (rogical arrangement) உணர்ந்து வகுத்துப் பார்க்கும் (analytic) நுண்ணறிவு பெறவும் பாடநூல்கள் உறு துணையா யிருக்கும்.

இத்தகைய நன்னோக்கங்களும், பயன்களும் கருதியே, தாய்மொழி முதன் மொழியானபின், அரசியலார் புதிய பாடத் திட்டங்களை அண்மையில் வெளியிட்டனர். புதிய தமிழ்ப் பாடத் திட்டத்தை அடியொற்றிப் பின்பற்றியே கீழ் அமைப்புகளுக்கு (Lower forms) இப்பாட நூல்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன. இவை, மேற் கூறப்பட்ட நோக்கங்களையும் பயன்களையும் தரும் வழியில் மாணவர்களைச் செலுத்துமேல், அதையே என் பணியின் பயனாகக் கருதுவேன்.

பாடத்திட்டப்படியே பொது சிறப்பு, ஆகிய இரு பிரிவுகளுக்கும் செய்யுட் பகுதிகள் பல திறத்தனவும், பல சுவையுடையனவும், முற்கால, இடைக்காலத் தற்காலங்களுக்கு எவ்வளவு வரிகள் ஓதுக்கப்படவேண்டும் என்ற வரையறைக்குட்பட்டும் தொகுக்கப்பட்டுள்ளன. வாழ்த்துப் பகுதிகள், கடவுள், மொழி, நாடுகளுக்கு எனச் சேர்க்கப்பட்டுள்ளன. அறவுரையிலும் பாடத் திட்டப்படி பலவகை நூல்களிலிருந்து பகுதிகள் எடுக்கப்பட்டுள்ளன. வரலாற்று (கதைப்போக்கு)ப் பகுதியும் அமைக்கப்பட்டுள்ளது. பல்சுவைப் பகுதியில், முற்கால, இடைக்காலத், தற்காலப் புலவர்களின், தனிப்பாடல்கள், இயற்கை வர்ணனைப் பாடல்கள் எளிய இனிய பாடல்கள், நாட்டுப் பாடல்கள், கிராமத் தொழில் பற்றியவை, இசைப் பாடல்கள், முதலிய பல வகைகளும் உள்ளன.

உரைநடைப் பகுதியும், பொது சிறப்பு, ஆகிய இரு பிரிவுகளுக்கும் எளிய, இனிய, தூய நடையில், பாடத் திட்டத்தை ஒட்டிய பொருள் வகைகள் கொண்டு விளங்குகிறது. ஏறக்குறைய பாதி அளவுக்கு மறைமுகமாகவும், நேர் முகமாகவும், பாடங்கள் இலக்கியத் தொடர்புடையனவாக உள்ளன. பழைய இலக்கியப் பகுதிகளில் சுவையூட்டுமாறு, உரை நடைப் படுத்தப் பட்ட பழைய இலக்கியப் பகுதிகளும், கற்பனை நகைச் சுவைக் கதைகளும், அறிவியற் புதுமைகள், கிராமக் குடிசைக் கைத்தொழில், இன்ப வெளிச்செலவு, நீர்ப் பாசன வசதி, சிறந்த பெருமக்கள் வாழ்க்கை வரலாறு, சிற்பம், சிறந்த வரலாற்று நிகழ்ச்சி, கலை, உரை நடை நாடகம், பாங்குமுறை, முதலிய பலவகைப் பாடங் களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்பாட நூலுள் வரும் இக்காலப் புலவர்களாகிய, கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, நாமக்கல் கவிஞர், இராமலிங்கம்பிள்ளை, பாரதிதாசன், பாரதியார், சுத்தானந்த பாரதியார் கரந்தைக் கவியரசு, ம. வி. இராகவன் முதலிய பலரின் கவிதைப் பகுதிகளிலிருந்து எடுத்துப் பாடல்களைப் போட்டுக் கொள்ளும்படி உதவிய அவற்றின் உரிமையாளர்களுக்கு, என் உளமார்ந்த நன்றி உரியதாகும்.

இப்பாட நூலை, நன்முறையில் வெளியிட்ட "எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி" உரிமையாளர் கட்கும் என் நன்றி உரித்தாகுக. இப்பாட நூலை நாட்டாண்மை, நகராண்மைக் கழகத்தார்களும், பிற பள்ளிக்கூடங்களை நடத்துவோர்களும், ஆசிரியர்களும், பொதுமக்களும், சிறப்பாக மாணவர்களும் விரும்பி ஏற்றுக் கொள்வார்கள் என்னும் நம்பிக்கை எனக்கு மிகுதியாக உண்டு.

ஆசிரியர் கல்லூரி,
சைதாப்பேட்டை.

ச. ஆறுமுக முதலியார்,
தமிழ்ப் பேராசிரியர்.

உள்ளுரை

எண்	பொருள்		பக்கம்
1	இசையின் சிறப்பு	....	1
2	எனது இன்ப வெளிச் செலவு	....	7
3	ஔவையார் தூது	....	13
4	தேனீ வளர்த்தல்	....	19
5	தாமே பயின்ற தமிழ்ப் பேராசிரியர்	....	26
6	பாங்கு முறை	....	31
7	வையை ஆறு	....	38
8	சர். ஜகதீச சந்திர போஸ்	....	44

I செய்யுள் பகுதி

(1)	வாழ்த்துப் பகுதி	....	50
(2)	மொழி அரசி	....	51
(3)	தமிழ்த் தாய்	....	53
(4)	தமிழ் நாடு	....	54

II அறவுரைப் பகுதி

(1) திருக்குறள் 53

(2) திரிகடுகம் ... 59

III கதைப் போக்குப் பகுதி

(1) பஞ்ச தந்திரம் 61

(2) வேலையாளின் இயல்பு 62

கலைமகள் வாசகம்

இரண்டாம் புத்தகம்

II உரைநடை

[சிறப்பு]

1. இசையின் சிறப்பு

நம் முன்னோர் தமிழை இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என மூன்றாக வகுத்தனர்; அம் மூன்றனுள்ளும் இசைத் தமிழை நடுநாயகமாக வைத்தனர். இயல் தமிழ்ப் பாட்டுக்களையும் இசை கூட்டியே படிக்கவேண்டும். நாடகத்திற்கு இசை இன்றியமையாதது. இசையின் இச்சிறப்பை நம் முன்னோர் நன்கு அறிந்திருந்தனர்.

உயிர்களுக்கு இன்பம் அளிக்கும் கலைகளுள் இசை தனிச்சிறப்பு உடையது. ஓவியம், நாடகம் போன்ற கலைகள் ஆறு அறிவு படைத்த மக்களையே மகிழ்விக்கும்; அம் மக்களுள்ளும் அவ்வக் கலைகளைக் கற்று அறிந்தவர்களுக்கே இன்பம் செய்யும். ஆனால் இசையோ, கற்றார், கல்லாதார், விலங்கினங்கள், பறவைகள் முதலிய எல்லா உயிர்க்கும் இன்பம் கொடுக்கும். அஃறிணை உயர்திணை ஆகிய இருதிணை உயிர்களையும் தன்வயப்படுத்தும் ஆற்றல் சிறப்பாக இசைக்கே உண்டு.

ஓர் அறிவே உடைய உயிராகிய மரங்களும் செடி கொடிகளும் இசைக்கு வயப்பட்டு நெகிழும். மலரும் பருவத்தில் உள்ள அரும்புகளில் வண்டுகள் அமர்ந்து இசைபாடும் என்றும், அவை அவ்விசையைக் கேட்டு மலரும் என்றும் நூல்கள் கூறுகின்றன. பாம்பு இசைக்கு அடங்கும் என்பது யாவரும் அறிந்ததே.

தெருவில் வரும் பாம்பாட்டிகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். விருப்பப்படி அலைந்து திரியமுடியாமலும், ஏற்ற உணவு இல்லாமலும் பெட்டியில் அடங்கி வாடி வருந்தியிருக்கும் நாகம், அவன் 'மகுடி' எடுத்து ஊதத் தொடங்கியதும் படமெடுத்து ஆடி மகிழ்ச்சி அடைகிறது அல்லவா?

மதம் பிடித்து அலையும் கொடிய யானைகளும் இசைக்கு வயப்பட்டு அடங்கிவிடும் என்னும் செய்தி பழந்தமிழ் நூல்களில் பலவிடங்களில் காணப்படுகின்றது. பெருங்கதை என்னும் நூலில் உதயணன் என்பவன் நளகிரி என்னும் மதம்பிடித்த யானையை வீணை வாசித்து அடக்கி, அதன்மேல் ஏறிச் செலுத்தினன் என்று ஒரு செய்தி காணப்படுகிறது. அகநானூறு என்னும் நூலில், மலை நிலத்தில் தினைக் கொல்லையைக் காவல் செய்துகொண்டிருந்த குறப் பெண் ஒருத்தி, பரணின்மேல் இருந்து இனிமையாகப் பாடிக்கொண்டிருக்கையில், தினைக் கதிரை உண்டு பசி ஆறுவதற்காக அங்குவந்த ஒரு யானை, அந்தப் பெண்ணின் இசை வயப்பட்டுக் கதிரை உண்ணுமல், தன் பசியையும் மறந்து மயங்கி நின்றதாக ஒரு செய்தி கூறப்பட்டுள்ளது.

கண்ணபிரான் கதையும், ஆனய நாயனர் வரலாறும் பசுக்கள் இசையின் வயப்படும் என்பதை விளக்குகின்றன. கண்ணபிரான் பசுக்களைக் காட்டில் பல இடங்களில் சென்று மேயும்படி விட்டு, மற்ற இடைச் சிறுவர்களுடன் ஓர் இடத்தில் விளையாடிக் கொண்டிருப்பார். மாலையில் அப்பசுக்களை ஒன்று சேர்த்து ஆயர் பாடிக்கு ஓட்டிச்செல்ல அவர் வேறு எதுவும் செய்வதில்லை; குழலை எடுத்து ஊதுவார்; அக்குழல் இசையைக் கேட்டுப் பல இடங்களிலும் நின்று மேய்ந்து கொண்டிருந்த பசுக்கள் எல்லாம்

ஒருங்கே திரண்டு அவரிடம் வந்து சேரும். சுமைவண்டி மாடுகளையும், கபிலை ஏற்றக் காளைகளையும் ஓட்டு பவர்கள் காதுக்கினிய தெம்மாங்குப் பாட்டுக்களைப் பாடுவதையும், அப்பாட்டுக்களைக் கேட்டு அம்மாடுகள் வருத்தத்தை மறந்து உள்ளக் கிளர்ச்சியுடன் தம் வேலையைச் செய்வதையும் நாம் இன்றும் காண்கிறோம்.

அசுணமா என்று ஒருவிலங்கு உண்டு என்றும், அஃது இனிமையான இசையைக் கேட்டுக் களிக்கும் என்றும், இனிமை அல்லாத இசையைக் கேட்டால் மூர்ச்சை அடைந்து விழுந்துவிடும் என்றும் அகநானூறு, சிந்தாமணி முதலிய தமிழ் நூல்கள் கூறுகின்றன. அதனைப் பிடிக்க எண்ணியவர்கள் செடி மறைவில் இருந்துகொண்டு யாழ்வாசிப்பார்கள் என்றும், அதன் இசையைக் கேட்டு அஃது அருகில் வந்து களிக்கும் என்றும், அப்பொழுது அதனைப் பிடித்துக் கொள்ளு வார்கள் என்றும் நற்றிணை என்னும் நூலில் ஒரு பாட்டு அறிவிக்கின்றது.

இசை, கல்நெஞ்சம் படைத்த கள்வர்களையும் தன் வயப்படுத்தும் தனிப்பேராற்றல் வாய்ந்தது. பாலை வனத்தில் வழிமறித்துக் கொள்ளையடிக்கும் ஒரு கூட்டத்தார் உண்டு. அவர்கள் வழிச்செல்வோரின் பொருள்களைக் கவர்ந்து கொள்வதோடு அவர்களைக் கொன்று அவர்கள் உயிரையும் கவர்வர். அவர்கள் வழிப்போக்கர்களிடம் பொருள் இல்லையானாலும், அவர்களை வாளால்வெட்டி, வெட்டப்பட்ட உடம்பு துள்ளுவதைப் பார்த்து மகிழும் கொடிய இயல்பு உடையவர்கள். அத்தகைய கொடுமை வாய்ந்த அக்கள்வர்களும் இசை பாடினால் அவ்விசையில் ஈடுபட்டு உருகி, தம் கையில் உள்ள படைகளை நழுவ விட்டு, தம் கொடுந்தொழிலையும் மறந்து மயங்குவராம். இது பழைய தமிழ் நூல் ஒன்றில் காணும் செய்தி.

அறிவு பெருத இளங்குழவிகளும் இசைக்கு வயப் படுவதை நாம் அறிவோம். குழவிகளைத் தூங்கச் செய்ய வேண்டுமானல் தாய்மார்கள் தாலாட்டுப் பாடுவதையும், அக் குழவிகள் அப்பாட்டைக் கேட்டு அழுகை ஓய்ந்து உறங்குவதையும் நாம் பார்க்கிறோம்.

இசை பிறரைத் தன்வயப்படுத்தும் என்பதற்குப் பின்வரும் நிகழ்ச்சி சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். சுமார் அறுபது எழுபது ஆண்டுகளுக்குமுன் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை என்னும் தமிழ்ப் புலவர் ஒருவர் இருந்தார். அக்காலத்தில் வாழ்ந் திருந்த தமிழ்ப்புலவர்கள் எல்லோரிலும் அவர் மிகச் சிறந்தவர். ஆகவே மற்றப் புலவர்கள் தாங்கள் இயற்றும் நூல்களுக்கு அவரிடம் மதிப்புரை பெற முயல்வது உண்டு. அக்காலத்தில் கோபாலகிருஷ்ண பாரதியார் என்னும் இசைப்புலவர் ஒருவரும் இருந் தார். அவர் சிவனடியார்களுள் ஒருவரான நந்தனு ருடைய சரித்திரத்தைத் தமிழில் கீர்த்தனங்களாகப் பாடியிருந்தார். அவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையை அணுகித் தாம் பாடின நந்தன் சரித்திரக் கீர்த்தனத் திற்கு மதிப்புரை தரும்படி வேண்டினர். அந்நூலில் இலக்கணப் பிழைகள் காணப்பட்டதால் பிள்ளைய வர்கள் 'மதிப்புரை தரமாட்டோம்' என்று கண்டிப் பாக மறுத்துவிட்டார்கள். ஆனல், பாரதியார் முயற் சியை விடவில்லை.

மீண்டும் ஒருநாள் பாரதியார் பிள்ளையவர்கள் வீட்டிற்கு வந்தார். அப்பொழுது பிள்ளையவர்கள் உள்ளே படுத்து உறங்கிக்கொண்டிருந்தார்கள். அதனை அறிந்தபாரதியார் அவரை எழுப்புதல் கூடாது என்று எண்ணி வெளித்திண்ணையில் இருந்தார். இருந்தவர் தமது நந்தன் சரித்திரக் கீர்த்தனையில் உள்ள "கனக சபாபதி தரிசனம் ஒருநாள் கண்டால் கலிதீரும்"

என்ற கீர்த்தனையை இனிமையாக மெல்லப் பாடிக் கொண்டிருந்தார். பிள்ளையவர்கள் விழித்துக் கொண்டு எழுந்து கீர்த்தனை முழுவதும் பாடும் வரையில் இருந்து கேட்டார். அவ்விசைப்பாட்டு அவரை வயப் படுத்தி விட்டது. அவர் மனம் உருகி, "இத்தகைய இன்பப் பாட்டுக்களைக் கொண்ட நூலுக்குச் சிறப்புப் பாயிரம் கொடாமல் இருப்பது முறையன்று" என்று எண்ணி, உடனே வெளியில் வந்து மதிப்புரை ஒன்றை எழுதிக் கொடுத்தார். மதிப்புரை பெற்ற பாரதியார் மனமகிழ்ந்து சென்றார்.

இசை ஈசனையும் வயப்படுத்த வல்லது. இதனா லேயே அன்பர்கள் யாவரும் ஈசனை இசைபாடியே போற்றி வருகின்றனர். கல்விக்குத் தெய்வமாகிய கலைமகள் கையில் வீணைகொண்டு இசைபாடி இன்புறு வதாகப் பெரியோர் கூறுகின்றனர். கண்ணபிரான் குழல்கொண்டு இசை பரப்பியதை யாவரும் அறிவர்.

இதுவரை கூறியவற்றிலிருந்து இசையின் சிறப்பு இனிது விளங்கும். இசை ஓரறிவுயிராகிய செடிகொடி முதல் ஆறறிவுயிராகிய மக்கள் வரையில் உள்ள எல்லா உயிர்களையும், கடவுளரையுங் கூட வயப்படுத்த வல்லது; உடலுக்கு உண்டான அயர்ச்சியைப் போக் கியும், உள்ளத்தைப் பிடித்த துக்கத்தை மாற்றியும் இன்பம் அளிக்க வல்லது. ஆகவே இளமாணவர் களாகிய நீங்கள் இத்தகைய சிறப்பு வாய்ந்த இசை யைப் பாடி இன்புறவும், கேட்டு இன்புறவும் பழக வேண்டும். உங்கள் இன்ப வாழ்வுக்கு இப்பழக்கம் இன்றியமையாததாகும்.

பயிற்சிகள்

1. இசைக்கு உள்ள தனிச்சிறப்பு யாது?
2. தாவரம் இசைக்கு இன்புறுதல் எவ்வாறு?

3. யானைகள் இசைக்கு வயப்படுவதை விளக்கும் செய்திகள் யாவை?

4. கண்ணபிரான் பசுக்களை எவ்வாறு வயப் படுத்திவந்தார்?

5. அசுணமாவின் தன்மை என்ன? அதைப் பிடிப்போர் என்ன செய்வர்?

6. இசை கொடியவர்களையும் வயப்படுத்தும் என்பது எவ்வாறு தெரிகிறது?

7. இசை பிறரைத் தன் வயப்படுத்தும் என்பதற்கு எடுத்துக்காட்டாகும் நிகழ்ச்சி ஒன்று கூறுக.

8. தேவரும் இசைக்கு வயப்படுவர் என்பது எவ்வாறு தெரிகிறது?

9. இயல், இசை, நாடகம்—இவற்றைப்பற்றிச் சிறுகுறிப்பு வரைக.

10. வயப்பட்டு, உற்சாகமாக, மதிப்புரை, இனிமையாக, நடுநாயகம், இன்றியமையாதது, உள்ளக்கிளர்ச்சி, வழிமறித்து - இவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

11. இப்பாடத்தில் காணப்படும் தமிழ் நூல்களின் பெயர்களைத் தொகுத்துக் காலமுறைப்படி இயலுமாயின் எழுதுக.

12. அவை கூறும் செய்திகளைத் தனித்தனி எழுதி வைத்துக்கொள்க.

13. அஃறிணை, பாம்பாட்டி, மதிப்புரை, இன்றியமையாதது- இவற்றைப் பிரித்து எழுதுக. ஏறி-ஏரி, உரை-உறை - பொருள்வேறுபாடு உணர்க; விலங்கு, ஆறு-இருபொருள் காண்க.

14. ஆற்றல், நெகிழும், மகுடி, பரணி, ஆயர்பாடி, பாலைவனம், தன்வயம், சிறப்புப்பாயிரம்- இவற்றிற்கு அகராதியைப் பார்த்துப் பொருள் அறிக.

15. இப்பாடத்தைப் படித்து இசையின் சிறப்பைப் பதினைந்து வரிகளில் சுருக்கி எழுதுக.

16. நாடகம், ஓவியம்-இக்கலைகளின் சிறப்பைப் பற்றித் தனித்தனிப் பதினைந்து வரிகள் எழுதுக.

17. உனக்குத் தெரிந்த இசைக் கருவிகளை எழுதுக.

2. எனது இன்ப வெளிச் செலவு

(எல்லோராக் குகைகள்)

என் பெயர் செல்வமணி. நான் சென்ற கோடை விடுமுறையில் என் பெற்றோருடன் பம்பாய்க்குச் சென்றிருந்தேன்; அங்கிருந்து அவர்களுடன் எல்லோராக் குகைகட்குச் சென்றேன்; அங்குக் கண்டறியாதன கண்டேன். நான் கண்டனவும் அங்குக் கேட்டனவுமாகிய புதுமைகளை என ஆசிரியர் சொற்படியே, எனது குறிப்புப் புத்தகத்தில் குறித்துள்ளேன். ஒவ்வொருவரும் அக் குகைகளைப்பற்றி அறிந்திருத்தல் வேண்டும். நான் அவை பற்றிய செய்திகளை உங்கட்குக் கூறுகிறேன்; கவனமாய்க் கேளுங்கள்.

ஐதராபாத்து நாட்டில் உள்ள 'அவுரங்கபாத்து' என்னும் புகைவண்டி நிலையத்திலிருந்து சுமார் 16 மைல் தூரத்தில் எல்லோரா என்னும் ஒரு கிராமம் உளது. இக்கிராமத்திற்குச் செல்ல மோட்டார் வண்டிகளே ஏற்றவை. 1925-ஆம் ஆண்டுக்குப் பின்பு தான் அவுரங்கபாத்துப் புகைவண்டி நிலையத்திலிருந்து எல்லோராவுக்கு, அரசப் பிரதிநிதியாயிருந்த

லார்ட் ரீடிங்கும் அவர் மனைவியும் சென்றதை முன்னிட்டு, ஐதராபாத்து அரசியலார் சாலை ஒன்று ஏற்படுத்தினார். அதுதான் தற்போது எல்லோராவின் புதுமைகளைக் கண்டு களிக்க மக்கட்கு உதவுகின்றது.

எல்லோராக் கிராமத்துக்கு அரை மைல் தூரத்தில், முப்பத்து நான்கு குகைகள் ஒரு பிறைமதி போன்ற வடிவத்தில் ஒருங்கே அமைந்து இருக்கின்றன. இவைகளைத்தான் எல்லோராக் குகைகள் என்று கூறுவர். இக்குகைகள் அமைப்பிலும், பண்டைப் பெருமையிலும் மஹாபலிபுரம், திருச்சிராப்பள்ளி, அஜந்தா என்னும் இடங்களில் பண்டை அரசர்



எல்லோராக் குகைகள்

களின் பெருமையை விளக்கும் குகைகளை ஒத்திருப்பினும், அவைகளைக் காட்டிலும் பன்மடங்கு வியக்கத்தக்க முறையில் சிறப்பிக்கப் பெற்றுள்ளன. மற்றக் குகைகளின் சிற்பவேலைகள். அயல் நாட்டுச் சிற்ப

நூல் முறையில் கலந்திருக்கையில், எல்லோராக் குகைகளைக் கட்டியிருக்கும் முறை முழுவதும் நம் நாட்டுச் சிற்ப வேலையை ஒட்டியே இருக்கிறது என்பது தெற்றென விளங்கும். இக்குகைகளைப்பற்றி எவ்வளவோ கேள்விப்பட்டிருந்தாலும், இவைகளை நேரில் பார்த்து அடையும் வியப்புக்கு வேறு எவ்வித வியத்தகு வரலாறும் இணையாகாது.

இனி இக்குகைகளின் உள் வேலைப்பாட்டையும், சிற்பிகளின் திறமையையும் பற்றிச் சிறிது கூறுவோம். குகை என்றால், உடனே இருள் நிறைந்தும், காற்றுப் புக இடமில்லாமலுமிருக்கும் ஓர் இடமே என்று நாம் நினைக்கிறோம். எல்லோராக் குகைகளோ இக்கருத்திற்கு முற்றும் மாறானவை. ஏனெனில், எல்லோராக் குகைகளில் ஒவ்வொன்றும் பெரிய பெரிய கல் மாளிகையைப் போன்றுள்ளது. இவை பெரிய இடமும், மிகுந்த வெளிச்சமும், நல்ல தூய்மையான காற்றும் நிறைந்தவை. ஒவ்வொரு குகையிலும் ஒவ்வொரு வியக்கத்தக்க வேலைப்பாடுள்ள கூடாரங்களும், வட்டமான கூரைகளும், கல் யானைகளால் தூக்கப்படுவது போலச் செதுக்கப்பட்டுள்ள கோயில்களும் இருக்கின்றன. மேற்கூறிய 34 குகைகளுள் 17 குகைகள் இந்துமதக் கொள்கைகளைச் சார்ந்து கட்டப்பட்டிருக்க, 12 குகைகள் புத்தமதக் கொள்கைகளை ஒட்டியனவாயும், 5 குகைகள் சமண சமய உண்மைகளை ஒட்டியனவாயும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும், சமணக் குகைளிலுங்கூடச் சிவபிரான் திருவுருவச்சிலைகள் க ணப்படுகின்றன.

இந்து மதக் கொள்கைகளை ஒட்டிக் கட்டப்பட்டிருக்கும் 17 குகைகளில் காணப்படும் அதிசயங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது கை லாசர் என்னும் பெயர் வாய்ந்த கற்கோயிலே. இக் கோயில் ஒரு பெரிய

மலையை மேலிருந்து நெடுகக் குடைந்து செய்த மிக அழகான சிற்பத்திற முடையதாகும். இக் கோயி லின் அடிப்பாகம் ஒரு பெரிய கூடமே. இக் கூடத் துக்கு மேல் குடைந்தமைக்கப்பட்டுள்ள கோயிலினு டைய நடுப்பாகம் அநேக கல்யானைகளின் முதுகின் மேல் கட்டப்பட்டிருக்கும் காட்சி மிகவும் விந்தையா னது. இக்கூடத்தைச் சுற்றிலும் அநேக சிலைகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை ஒரு முறை சுற்றிப் பார்ப்போர்க்கு நமது புராணங்களின் எல்லா விவரங்களும் புலனாகிவிடும். ஏனெனில், இக்குகையில் செதுக்கப்பட்டுள்ள உருவங்கள் எல்லாம் புராணக் கதைகளிலுள்ள சிறு கதைகளின் போக்கை ஒட்டிய வைகளே ஆகும்.

இக்கோயிலின்மீது ஆரம்பத்தில் வர்ணம் தீட்டப் பெற்றிருக்க வேண்டுமென்பது இன்றும் ஆங்காங்கே காணப்படும் வர்ணத் துண்டுகளால் தெரியவருகிறது. மதவெறிகொண்ட அயல்சமயத்தவர், இச் சிலைகளின் பேரழகைக் கண்டு பொறாமைப்பட்டு, யானைகளின் கால்களையும் தும்பிக்கையையும் உடைத்தும், உருவச் சிலைகளின் பல பாகங்களைப் பெயர்த்தும் கெடுத்து விட்டார்கள்.

புத்தமதக் குகைகள் பன்னிரண்டில் ஐந்தாவது குகையே மிகவும் வியக்கத்தக்கது. இதில் பெரிய புத்த உருவம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. குகையின் கூரை கிறிஸ்தவக் கோயில்களைப் போலவும், தற் போது கட்டப்படும் சொற்பொழிவு அறைகளைப்போல வும், 30 அடி குறுக்களவுள்ள வட்டமான அமைப்பைப் பெற்றுள்ளது. புத்த உருவத்தைச் சுற்றிலும் புத்த சமயத்தவர்கள் அவ்வுருவத்தைச் சுற்றி வலம்வர வசதியாக இடம் விடப்பட்டிருக்கிறது. இதுவுமன்றிக் குகையின் நான்கு பக்கங்களிலும் பல அறைகளும்,

துறவிகள் இருத்தற்கும் பாடம் கற்பித்தற்கும் ஏற்ற வாறு அநேக மேடைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் நேரில் வந்து கண்ட சீன வழிப் போக்கர்களும் பழைய சரித்திர ஆசிரியர்களும் வியந்து, 'இக்குகைகள் மனிதனால் இயற்றப்பட்டவை அல்ல; பூதங்களாலேயே கட்டப் பெற்றிருத்தல் வேண்டும்!' என்று துணிந்து கூறினார்கள். 'தற்கா லத்தில் அவற்றைக் கண்ணுறும் நமக்கு அவற்றின் காட்சி அத்தகைய வியப்பையே தருகின்றது.

அங்குள்ள ஜைனக் குகைகளுள் மிகவும் பெருமை பெற்றிருப்பது ஒரே குகைதான். அக்குகைக்குச் சீதை நீராடு கட்டம் என்பது பெயர். அது மற்றக் குகை களைப் போலன்றிக் குளிர்ச்சி பொருந்தியதாயும், பெரியதாயும், சிலைகள் நெருக்கமாய் அமைந்ததாயும் இருக்கிறது. அங்குக் காணப்படும் சிலைகளுள் பார்வதி திருமணம் முழுவதும் சிலை வடிவில் செதுக்கப்பட்டிருப் பது மிகவும் வியப்பைத் தருகிறது.

எல்லோராக் குகைகளின் அழகைக் கண்டு இன் புறும் ஒவ்வொருவரும், நமது நாடு சிற்ப நூலிலும், கடவுள் அன்பிலும் எவ்வளவு மேன்மை பெற்றிருந் தது என்பதை நினைத்துப் பெருமை அடைவர் என்ப தில் ஐயமில்லை. இக்குகைகள் அழிவு அடையாதபடி பாதுகாக்கப் பெற்று வருகின்றன.

இத்தகைய வரலாற்றுப்புகழ் வாய்ந்த இடங்க ளைச் சென்று காண்பது மாணவராய நமது கடமை அன்றோ?

பயிற்சிகள்

1. எல்லோராவுக்குப் போகும் வழியைக் கூறுக. எல்லோராக் குகையை வேறுசில குகைக ளோடு ஒப்பிட்டு, அவற்றைவிட இதற்குள்ள சிறப்பை எடுத்து எழுதுக.

2. எல்லோராக் குகைகளின் உள்வேலைப்பாட்டைச் சுருக்கி எழுதுக.

3. இந்து மதக் கொள்கையை ஒட்டிய குகைகளிற் சிறந்தது எது? அதைப்பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.

4. துடித்தான்—அடியுண்டது. செய்தான்—செய்யப்பட்டது. இவை முறையே செய்வினையும் செயப்பாட்டு வினையுமாம். இதுபோல இப்பாடத்திலும், பிற பாடங்களிலும் வரும் 10 செயப்பாட்டு வினைகளைப் பொறுக்கி எடுத்து அவற்றுக்கேற்ற செய்வினைகளையும் தருக.

5. புத்த மதக் குகையிற் சிறந்தது எது? சுருக்கி விளக்குக.

6. சமண மதக் குகையிற் சிறந்ததைப்பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.

7. எல்லோராக் குகையைக் காண்பவர்கள் எதை அடைவர் என்பதில் ஐயமில்லை?

8. புதுமை, பிறைமதி, உள்வேலைப்பாடு, அமைப்பு, உருவச்சிலை, வரலாற்றுப் புகழ்—இத்தொடர்களை விளக்கி, தனித்தனி வாக்கியங்களில் வைத்து எழுதுக.

9. கோடை, களிக்க, பிறைமதி, தெற்றென, சிலைகள், புலனாகும்—இச் சொற்களுக்கு அகராதியைப் பார்த்துப்பொருள் அறிக.

3. ஔவையார் தூது

தமிழகத்துப் பெருமூதாட்டியாரான ஔவையா ரைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஔவையார் சிறந்த தமிழ்ப் புலவர் மட்டுமல்லர்; அரசர், வள்ளல் முதலியோருக்கு அறிவுரை கூறும் ஆசிரியர் போன் றும் இருந்திருக்கிறார்; அரசியல் அலுவல்களில் ஈடுபட்டு அமைச்சரைப் போன்றும் பணியாற்றியுள்ளார். இவர் உண்மையை எடுத்துரைப்பதில் மிகவும் துணிவு கொண்டவர். இதனைப் பின் வரும் நிகழ்ச்சியால் அறியலாம்.

ஔவையார் காலத்தில் தொண்டை நாட்டை ஆண்ட மன்னவன் தொண்டைமான். இவன் முடி யுடைமன்னர் மூவரோடும் வைத்தெண்ணத்தக்க பெருமை பெற்றவன்; அறிவாற்றல்களில் மிக்கவன். 'குறுநில மன்னன் தானே' என்று எண்ணிப் பல மன்னர் இவன் நாட்டின்மீது படையெடுத்து வந்தனர். ஆனால் இவன் தன் வலிமையால் அவர்களை யெல்லாம் புறங்காட்டி ஓடச் செய்தான். தொண்டைமான் காலத்தில், அதியமான் என்பான் கொல்லிமலைக் கருகில் உள்ள தகடூர் என்னும் ஊரைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டு வந்தான். இவன் பல பெரிய அரசர் களையும் வென்று வாகை சூடியவன். வெற்றிமேல் வெற்றி பெற்ற அதியமானுடைய நாடு விரிவடைந்தது. அவன் புகழும் ஓங்கலாயிற்று.

அதியமானுடைய புகழ் பிறைமதிபோல் வளர் வதைக்கண்டு தொண்டைமான் பொறாமை கொண் டான். ஆகவே அவனுடன் போர் செய்யக் கருதிச் சிறந்த படையொன்றைத் திரட்டினான்; அதற்கெனப் புத்தம் புதிய போர்க்கருவிகளை யெல்லாம் திரட்டி ஆயத்தம் செய்தான்; அவற்றைப் படைக்கலக்கொட்

டிலில் அழகு பெற அமைத்தான்; படையெடுக்கத் தக்க காலத்தை எதிர் நோக்கி யிருந்தான்.

தொண்டைமான் தன்னுட்டின்மீது படை யெடுக்கச் செய்யும் ஆயத்ததத்தைப் பற்றி அதியமான் கேள்விப்பட்டான். மானத்திலும் வீரத்திலும் மிக்க அதியமான் அஞ்சுவானே! தொண்டைமானுடன் போர் புரியும் ஆற்றல் அவனுக்குண்டு. ஆயினும் போர் செய்வதை அவன் விரும்பவில்லை. 'தொண்டைமானுடன் போர்செய்ய நான் அஞ்சவில்லை. இப் போர் காரணமாக இரு திறத்திலும் வீரர் பலர் இறக்க நேரிடுமே! அந்தோ! மண்ணுசை கொண்ட மன்னர் இருவர் காரணமாக மக்கள் அல்லவோ மாள்கின்றனர். ஆகையால் எவ்வகையிலும் போர் நிகழாவண்ணம் தடைசெய்வதே சிறந்ததாகும். என் வலிமையைத் தொண்டைமான் அறிந்தானில்லை. அறிந்தால் போரை அவன் நிறுத்தலுங்கூடும். தொண்டைமானிடம் தக்க தூதுவரை அனுப்பின் நான் எண்ணுவது முடியும்' என்று எண்ணினன். எவ்வகையிலும் தன் அவைக்களப்புலவராகிய ஔவையே தூது செல்லச் சாலச் சிறந்தவர் என்று துணிந்தான்.

உடனே, ஔவையை அழைத்துத் தன் கருத்தைக் கூறினன். 'அம்மையே! நீர் தொண்டைமானிடம் தூது சென்று வரவேண்டும்' என்று வேண்டிக் கொண்டான்.

தூதருக்கு அமையவேண்டிய நல்லியல்புகளும், தாமாக வேற்றரசனிடம் எடுத்துக்கூறும் வன்மையும் ஔவையார் பெற்றிருந்தார். அவர் தம்மைப் புரந்து போற்றிவரும் அதியமான் வேண்டுகோளை மகிழ்ச்சியுடன் ஏற்று, தூது செல்ல இசைந்தார்.

தமிழ் மூதாட்டி ஔவை தொண்டை நாட்டுத் தலைநகரான காஞ்சியை அடைந்தார். தமிழன்பு மிக்க தொண்டைமான் அவர் வருகையை அறிந்து, அவரைப் பெருமைப்பட வரவேற்று விருந்தோம்பி ஞன். ஔவையாரும் தொண்டைமாேடு சிறிது நேரம் இன்னுரையாடிக் கொண்டிருந்து பின் தாம் அவனிடம் சொல்லக்கருதிய தூது மொழிகளை அவன்

தொண்டைமான் அரசனும் ஔவையும்

மனத்திற் பதியுமாறு கூறினார். தொண்டைமானும் ஔவையின் கருத்துக் கிணங்கி நடக்க ஒப்புக் கொண்டான்.

ஆயினும் அவன் படைச்செருக்கு அழியவில்லை. அவன் படைக்கலப் பெருமையை ஔவையாருக்குக்

காட்ட விரும்பினான்; ஔவையாருக்குக் காட்டினால் அவர் அதியமானிடம் அதைப்பற்றிக் கூறுவார் என்றெண்ணினான்; தன் அரண்மனையின் பகுதிகளைக் காட்டுகின்றவனைப் போலப் படைக்கலக் கொட்டிலுக்கு அழைத்துச் சென்றான். அங்குப் பல வகையான புதிய படைக் கலங்கள் இருந்தன. அவை பளபளப்புடன், நெய் பூசப்பெற்று, மயிற்றோகை, மாலை சூட்டப்பெற்று அழகுடன் விளங்கின. ஔவையார் அவற்றையெல்லாம் கூர்ந்து நோக்கினார். தொண்டைமானுடைய மனக் கருத்தைக் குறிப்பாலுணர்ந்து அவனது செருக்கை அடக்கக் கருதிப் பின் வருமாறு கூறினார்:

"காஞ்சி மன்னவனே! உன் படைக்கலங்கள் புத்தம் புதியவையாய் நாள்தோறும் நெய் பூசப்பட்டு ஒளியுடன் மாலையோடு நேர்த்தியாய் விளங்குகின்றன. ஒளியோ கண்ணைப் பறிக்கின்றது. ஆனால், அதியமான் படைக்கலக் கொட்டிலில் படைக்கலங்களே இல்லை. அவையெல்லாம் இரத்தக் கறையுடன் கங்கும் நுனியும், மழுங்கியும் முறிந்தும் கொல்லன் உலைக் களத்தில் கிடக்கின்றன" என்றார்.

இவ்வாறு தொண்டைமானுடைய படைக் கலங்களைப் புகழ்வதுபோல இகழ்ந்தும், அதியமானுடைய படைக்கலங்களை இகழ்வது போலப் புகழ்ந்தும் கூறினார். "தொண்டைமானும் அவனுடைய வீரரும் போரில் கலந்து கொள்வதில்லை. எனவே அவனுடைய படைக் கலங்கள் முறிபடாமல் அழகாக நெய் பூசப் பெற்று, மாலையுடன் படைக் கலக்கொட்டிலில் வைக்கப் பட்டுள்ளன. அதியமானோ வென்றால், பல போர்களைப் புரிகிறான். அவன் வீரரும் பல போர்களில் கலந்துள்ளனர். எனவே அதியமானுடைய படைக் கலங்கள் கங்கும் நுனியும் மழுங்கியும் முறிந்தும்

கொல்லன் களத்தில் கிடக்கின்றன" என்பதே ஔவையார் கூறியதன் கருத்தாகும். இவ்வண்ணம் ஒரு முடியுடைய மன்னனிடம் மொழிவதற்கு எவ்வளவு துணிவு வேண்டும்.

ஔவையார் கூறியதை நன்கு உணர்ந்தான் தொண்டைமான். அவன் மனம் கலங்கிற்று அமைதி விரும்பும் உள்ளத்தனாய் மேலும் உரையாடினான். ஔவையாரும் காஞ்சி மன்னன் போர் மேற்கொள்ளாது அமைந்தது கண்டு மேலும் அறிவு புகட்டிச் சென்றார்.

முத்தமிழ்ப் புலமையும், முதன்மைத் தூதர் தன்மையும் ஒருங்கே அமைந்த அம்மையார் போன்றவராலன்றோ தமிழகம் பெருமை யுறுகின்றது!

பயிற்சிகள்

1. ஔவையார் புலவராயிருந்ததோடு இன்னும் எதில் சிறந்திருந்தார்?
2. தொண்டை நாட்டையும், தகடூரையும் அக்காலத்து ஆண்டவர் யார்? அவர்களைப்பற்றிச் சிறு குறிப்புகள் வரைக.
3. அதியமான் ஔவையாரை ஏன் தூது அனுப்பினான்?
4. ஔவையார் தூது சென்றதால் விளைந்த பயன் யாது?
5. இக் கதையை நாடகமாக நடித்துக் காட்டுக.
6. 6-7-8-ஆம் பத்திகளை உரையாடுவதுபோல் எழுதிக் காட்டுக.
7. பெருமூதாட்டி, அறிவுரை, ஈடுபட்டு, அறிவாற்றல்கள், புறங்காட்டி, மண்ணாசை, படைக்கலக் கொட்டில், முத்தமிழ்ப் புலமை —இத் தொடர்களை விளக்கி, தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

8. மரம், கல், பொன், மலை-பாம்பு-இச்சொற்கள் தோன்றியதற்குக் காரணம் கூற இயலவில்லை-காரணம் கருதாமல் இட்ட குறிப்பெயர்கள் இடுகுறிப் பெயர்கள். பறவை (பறப்பது), அணி (அணியப்படுவது), வளையல் (வளைந்திருப்பது), முக்காலி (மூன்று காலுடையது) .... இவை காரணம் கருதி வந்த காரணப் பெயர்கள். இவற்றைப்போல, உங்கள் பாடங்களிலிருந்து சில பெயர்களைப் பொறுக்கி எடுத்து, கீழ்க்கண்டபடி அட்டவணையில் வகைப்படுத்தி எழுதுக.

இடுகுறிப் பெயர்கள்	காரணப் பெயர்கள்

9. ஔவையாரின் முதன்மைத் தூதர் தன்மையை விளக்கி 15 வரிக்குள் ஒருபத்தி வரைக.

10. புறம், வாகை, மானம், இறத்தல், வன்மை, படைக்கலம், புகட்டி—இச்சொற்களின் பொருள்களை அகராதிகொண்டு அறிக.

4. தேனீ வளர்த்தல்

நம் நாட்டில் தொழிலில்லாது தவிப்பவர் பலர். அவர்கள் இப்போது சிற்சில குடிசைத் தொழில்களில் ஈடுபட்டு வருவதை நாம் காண்கிறோம். அத்தொழில்களில் சில, பொருட் செலவு இன்றி எளிதில் பயன் தரக்கூடியனவாய் இருக்கின்றன. இத்தகைய தொழில்களில் தேனீ வளர்ப்பதும் ஒன்று. நம்மவர் நெடுங் காலமாகத் தேனைச் சேர்த்து வந்திருக்கின்றனர். அஃது உணவுப் பொருள்களில் ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதை மருந்துகளுக்கும் பயன்படுத்துகிறார்கள். "முப்பழமும் தேனும்"



தேன் அடை

"பாலும் தெளிதேனும்" என்பனபோன்ற வாக்கியங்களினால் நம்முன்னோர்கள் தேனை எவ்வாறு மதித்திருந்தார்கள் என்பது நன்கு விளங்கும். இதன் பயனைக் கண்டு அறிந்தே நம்நாட்டு மருத்துவர், மருந்துகளில் நூற்றுக்கு ஐம்பது பங்கு இதனைச் சேர்த்து வருகின்றனர்.

நம் முன்னோர்கள் தேன் சேர்த்த முறை ஒரு வகையானது. அவர்கள் தேன்கூடுகள் இருக்கும் இடங்களுக்குச் சென்று, தேனீக்களைத் துரத்தி, அவற்றின் கூடுகளை எடுத்து வந்து, கைகளினால் பிழிந்து தேன் எடுத்து வந்தார்கள். அங்ஙனம் எடுக்கப்பட்ட தேனில் அழுக்குப் பொருள்களும் கலந்திருத்தல் இயல்பே. இப்போது ஈக்களை விரட்டாமலும், அழுக்குப் பொருள்கள் கலவாமலும், தூய தேனைச் சேர்க்க எளிய முறை கையாளப்பட்டு வருகிறது.

வானளாவி வளர்ந்த மலைகளும், பூக்கள் நிறைந்து தேன் சொரியும் சோலைகளும், இயற்கை வளமும் பெற்றுள்ள நம் தமிழ்நாட்டில் தேனீத்தொழில் நடத்துவதற்கு வேண்டும் வசதிகள் இயல்பாகவே அமைந்து இருக்கின்றன. இப்பொழுது தமிழ் நாட்டில் தேனீக்களை வளர்த்துத் தேன் எடுக்கும் பண்ணைகள் சில வேலை செய்து வருகின்றன. அவற்றில் இது பற்றிய ஆராய்ச்சி வேலையும் நடைபெற்று வருகின்றது.

இத்தொழில் நடத்துவது எவ்வாறு என்பதைக் கருதும் முன், ஈக்களின் வகைகளைப் பற்றிக் கவனிப்போம்; அவை மலைத் தேனீ, அடுக்குத் தேனீ, கொம்புத் தேனீ, கொசுத்தேனீ எனப் பலவாம். அவற்றுள் மிகுதியாகத் தேன் தரக்கூடியவை மலைத் தேனீக்களே. மிகக் குறைவாகத் தேன் கொடுப்பவை கொசுத் தேனீக்கள். மலைத் தேனீயைப் பிடிப்பதும் வளர்ப்பதும் கடினம். கொம்புத் தேனீயும், ஊதியம் பெறக்கூடிய அளவில் தேன் சொரிவதில்லை. எளிதில் வளர்க்கக் கூடியதும், உழைப்பினால் மிக ஊதியம் தரக் கூடியதும் அடுக்குத் தேனீயே ஆகும். இவை இருண்ட மரப்பொந்துகளிலும், பாறைகளின் இடுக்குகளிலும், சுவரின் சந்துகளிலும் கூடு கட்டும். இவை

கூட்டம் கூட்டமாகச் சேர்ந்தே வசிக்கும். நல்ல தேன் கூட்டில் 40 அல்லது 50 ஆயிரம் தேனீக்கள் இருக்கும். இவை, தாம் கட்டின கூட்டில் இடம் இல்லாமற் போகுமானால், வேறு இடத்தில் குடியேறும் இயல்பு உடையவை. இவை மலைத் தேனீயை விட அடக்கமானவை. இவற்றைப் பெட்டிகளில் வைத்து வளர்ப்பது மிகவும் எளிது.

தேனீக் கூட்டங்களில் அல்லது குடும்பங்களில் மூன்று விதமான ஈக்கள் இருக்கின்றன. அவை அரசி ஈ, உழைக்கும் ஈ, சோம்பேறி ஈ என்பன. அரசி ஈயே, இக்குடும்பம் வளர்வதற்குக் காரணமாக இருக்கிறது.

உழைக்கும் தேனீக்கள் தம் உடல்களிலிருந்து வரும் ஒருவித மெழுகைக் கொண்டும் கூடு கட்டுகின்றன. அதன் அறைகளில் தான் அரசி ஈ வளர்ந்து முட்டைகளிட்டுக் குடும்பத்தைப் பெருக்குகிறது. முட்டைகளிலிருந்து புழுக்கள் தோன்றித் தேனீக்களாக மாறுகின்றன. இவ்வாறு முதலில் வெளிப்படு

தேனீக்கள்

வன உழைப்பாளி ஈக்களே. இவை தேன் கூடுகளை அமைப்பதும், உணவு கொண்டுவந்து கொடுத்து மற்ற ஈக்களை ஊட்டுவதும், தேன் சேர்ப்பதும் ஆகிய இவ் வேலைகளில் எப்பொழுதும் உழைத்துக்கொண்டே

இருப்பதனால், ஆறு மாதங்களுக்குள் இறந்துவிடுகின்றன.

சோம்பேறி ஈக்கள் ஆண் தேனீக்கள் ஆகும். இவை ஒரு வேலையும் செய்யாமல் கூட்டிற்குப் பாரமாகவே இருக்கும்; உழைக்கும் ஈக்கள் கொண்டுவரும் தேனை உண்டு வீண் காலம் கழிக்கும். தேன் கிடைக்காத காலங்களில் உழைக்கும் ஈக்கள் இந்தச் சோம்பேறி ஈக்களைக் கொன்றுவிடும். அரசி, தேனீக்குத் 'தாய்த் தேனீ' என்றும் ஒரு பெயர் உண்டு. இதற்கு முட்டை யிடுவது தவிர வேறு வேலையும் இல்லை. இது மூன்று ஆண்டுக் காலம் உயிரோடு இருக்கும். இது, தான் இறப்பதற்கு முன் பெண் தேனீ ஒன்றை உண்டாக்கும்.

தேனீக்களைப் பிடித்து வளர்ப்பதற்குச் சிறிய மாடி வீடுகள் போன்ற பெட்டிகள் செய்யப்படுகின்றன. இப்பெட்டிகளில் தேன் வைக்கும் பாகம் ஈக்கள் வளரும் பாகம் என இரண்டு பாகங்கள் இருக்கின்றன. இதனாலேயே தேனீக்களுக்கும் அழிவு செய்யாமல் தூய்மையான தேன் எடுப்பது எளிதாக இருக்கிறது. இவ்வாறு எடுக்கும் தேன் ஓர் ஆண்டில் இருபது ரூபாய் மதிப்புள்ளதாக இருக்கிறது என்று பண்ணைகளில் வேலை செய்யும் ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகின்றார்கள்.

தேன் பலவகைகளிற் பயன் படுகின்றது.

1. தேன் மருந்துக்காகப் பயன்படுகிறது.
2. தேன் உடற்சத்தை மிகுதிப் படுத்துகிறது.
3. இது குருதியை மிகுதிப் படுத்துகிறது.
4. பழைய தேன் இருமலையும் பித்தத்தையும் போக்கும்.
5. தேன் நீண்ட ஆயுளைத் தரும்.

நாம் தேனீக்களிடமிருந்து அறிந்துகொள்ளவேண்டும் உண்மைகள் பல இருக்கின்றன: (1) ஒருவர் ஆணைக்குக் கட்டுப்பட்டு எல்லோரும் ஒற்றுமையாக வேலை செய்தால் குடும்பம் உயர் நிலையை அடையும். (2) நாம், உழைக்கும் ஈக்களைப் போல உழைத்தால் விரைவில் மேன்மை அடையலாம். (3) தாம் சேர்த்த தேனில் வேண்டிய அளவு பருகி, எஞ்சியதைச் சேமித்துக் காத்துவரும் ஈக்கள் போல, நாம் ஈட்டும் பொருளில் வேண்டுவதைச் செலவிட்டு எஞ்சியதைப் பாதுகாத்தால், எதிர்காலத்தில் நன்மை அடையலாம், என்பன, அவ்வுண்மைகளிற் சில.

இவ்வாறு நம் உடலுக்கும் உயிர்க்கும் உறுதியை அளித்தும், வாழ்க்கைக்கு வேண்டிய உண்மைகளை உணரவைத்தும் நமக்குப் பேருதவி செய்துவரும் தேனீ வளர்ப்புத் தொழிலை நாம் மேற்கொண்டு செய்து, மேன்மை அடைய முயலவேண்டும்.

பயிற்சிகள்

1. தேன் எப்படி உண்டாகிறது?
2. தேனீக்களின் வகைகள் எவை?
3. நீ அவற்றால் அறியும் நீதி என்ன?
4. தேன் எவ்வாறு நம் முன்னோரால் சேர்க்கப்பட்டது?
5. தூய்மையான தேனை எப்படிச் சேர்ப்பது?
6. தேனின் பயன் என்ன?
7. உழைக்கும் ஈ, அரசி ஈ- சிறு குறிப்புகள் வரைக?
8. அடுக்குத் தேனீ எங்கு வசிக்கும்?
9. தேனீக்கள் குடும்ப வரலாற்றை 12 வரிகளுள் சுருக்கி எழுதுக.
10. தேன் எடுக்கும் முறைகளை 12 வரிகளுள் சுருக்கி எழுதுக.

11. அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் கோடிட்ட இடங்களுக்குப் பொருத்தமானவற்றைப் பொறுக்கி அமைத்து எழுதுக.
(பெரும்பாடு, தலை சிறந்து, உருப்போட்டு, உயிரினும் மேலாக, வானத்தை யளாவி)
(i) ஒரு காலத்தில் தமிழ் மொழி—விளங்கிற்று.
(ii) தசரதன் இராமனைத்தன்—எண்ணியிருந்தான்.
(iii) காட்டில் மரங்கள்—வளர்ந்திருந்தன.
(iv) சில பிள்ளைகள் பாடங்களை—எழுதுகிறார்கள்.
(v) தலைவர்கள் தேச நன்மைக்காக—பட்டு வருகிறார்கள்.

12. ஒருவர் ஆணைக்குக் கட்டுப்பட்டு ஒற்றுமையாக வேலை செய்தால் குடும்பம் உயர் நிலையை அடையும்:—இதில் உள்ள
(a) குறில் எவை? நெடில் எவை?
(b) மெய் எழுத்துக்கள் எவை?
(c) வ, ட, ரி, கொ, டு, போ, ளை, சு, செ, தா—உயிர் வேறு, மெய் வேறாகப் பிரித்து எழுதுக.

13. அவன் வெனிஸ் நகரத்தான். இவள் பாடினாள்—இவ் வாக்கியங்களில் 'அவன்' என்பது குறிப்பிட்ட ஒருவனைச் சுட்டுகிறது; இவள் என்பது குறிப்பிட்ட ஒருத்தியைச் சுட்டுகிறது. இங்ஙனம் சுட்டும் சக்தி உடைய எழுத்துக்கள் 'அவன்' என்பதில் உள்ள "அ" 'இவள்' என்பதில் உள்ள 'இ' என்பனவே. இவை சொற்களின் முதலில் இருந்து பொருள்களைச் சுட்டுவதால் சுட்டு எழுத்துக்கள் எனப்படும். 'உ' என்பது

செய்யுளில் மட்டுமே சுட்டெழுத்தாக வரும். ஆகவே, சுட்டு எழுத்துக்கள் மூன்று. அவை அ, இ, உ என்பன. அகச்சுட்டு, புறச்சுட்டு களை இலக்கணப் பாடத்தில் படித்தீர்கள். இங்குப் பாடங்களில் வரும் அகச்சுட்டு, புறச் சுட்டுகளைத் தொகுத்து அட்டவணையில் எழுதுக.

கீழ்க்கண்டவற்றைக் கவனி:

	தன்வினை		பிறவினை
14.	வளர்ந்தது	—	வளர்த்தது
	இரு	—	இருத்து
	காய்	—	காய்ச்சு
	சுருள்	—	சுருட்டு
	களைப்பாறு	—	களைப்பாற்று
	தா	—	தருவி
	பிடி	—	பிடிப்பி
	சுருட்டு	—	சுருட்டுவி
	தருவி	—	தருவிப்பி

தொழில் செய்பவர் (தான்) செய்யும் வினை, தன் வினை; ஒருவர் பிறரைக் கொண்டு செய் விக்கும் வினை, பிறவினை எனப்படும். இது போன்ற பிறவினைகளை இப்பாடத்திலும் பிற பாடங்களிலும் இருந்து பொறுக்கி எடுத்து, அவற்றிற்கு நேராக அவற்றின் தன் வினை களையும் எடுத்து எழுதுக.

15. குடிசைத் தொழில், வானளாவி, இயற்கை வளம், உழைப்பாளி, ஆணைக்குக் கட்டுப்பட்டு, மேற்கொண்டு, பண்ணைகள்—இவற்றை விளக்கித் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

5. தாமே பயின்ற தமிழ்ப் பேராசிரியர்

'தமிழ் மொழி கற்க இருவரேனும் வேண்டும்' என்பர். ஏன்? ஒருவர் ஐயத்தை மற்றவர் தீர்க்கவும், சேர்ந்து நூல்களை ஆராய்ந்து படிக்கவும் இருவர் வேண்டும் என்பர். ஆனால் ஒருவரே தமக்குத் தாமே உதவியாக இருந்து கருமமே கண்ணாகி, அல்லும் பகலும் உழைத்து வசை இலா இசை பெற்றுத் தமிழ் அன்னையின் தவப் புதல்வராக விளங்கியவர் நடுக்காவிரி நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் என்று கூறலாம்.

நடுக்காவிரி, காவிரி பாயும் சோழநாட்டிலே தஞ்சைக்கு அண்மையில் விளங்கும் பல சிற்றூர்களில் ஒன்று. இச் சிற்றூரில் வளர்ந்த பல மரபுகளில் நாட்டார் மரபும் ஒன்று. இம்மரபினர் அஞ்சா நெஞ்சினராய், வீரராய், ஆள்வினையுடையராய் விளங்கினர். இப்பொழுது அவர்கள் தம் முன்னோரின் சிறந்த குணங்களினின்று மாறுபடாதிருக்கின்றனர். அத்தகைய சீரும் சிறப்பும் மிக்க நாட்டார் மரபில் நீதி, நடு நிலைமை, கடவுள் அன்பு, தமிழ்ப்பற்று, சான்றாண்மை முதலிய அருங்குணங்களைக் கொண்டு விளங்கிய முத்துசாமி நாட்டாருக்குத் தமிழ்நாடு செய்த தவப்பயனாய் நம் வேங்கடசாமி நாட்டார் 1884-இல் மகனாகத் தோன்றினார்.

நம் நாட்டார் அவர்கள் டாக்டர் உ. வே, சாமிநாத ஐயர்போல் திண்ணைப் பள்ளிக்கூடக் கல்வியினையே பெற்றார். தம் சிறிய தந்தையாகிய சொக்கலிங்க நாட்டார் சில ஆரம்பத் தமிழ் நூல்களைக் கற்பித்தார். பிறகு தாமே தமிழ் நூல்களைக் கற்க முனைந்தார். அன்றாடப் பேச்சு வழக்கிலும் திருத்தமான செந்தமிழ்ச் சொற்களையே வழங்கி வந்தார். முழு உருவம் பெறாத தமிழ்ச் சொற்களை நாட்டார் வாயிலிருந்து

கேட்கவே முடியாது. ஊரில் நடக்கும் காவியம், புராணம், இதிகாசம் ஆகியவற்றின் தொடர்பு கொண்ட சொற்பொழிவுகளைத் தப்பாமல் கேட்கச் செல்வர். தந்தையின் உழவுத் தொழிலுக்கு உதவும் நேரம் போக மீதியுள்ள பெரும் பொழுதையும் தேவார திருவாசகம் படிப்பதிலும், வீட்டுத் தோட்டவேலை செய்வதிலும் கழிப்பார். இங்ஙனம் அமைதி வாய்ந்த இயல்பினராகவும் கல்வியில் கருத்துடையவராகவும் விளங்கியமை கண்டு நாட்டாரை ஊரார் போற்றிப் புகழ்ந்தார்கள்.

நாட்டார் தம் இருபதாம் வயதில் ஒரு புது வாழ்க்கை நெறியைக் கண்டுகொண்டார். அப்பொழுது அவ்வூருக்குப் பள்ளிக்கூடக் கண்காணிப்பாளர் திரு. ஐ. சாமிநாத முதலியார் வந்திருந்தார். நாட்டாரின் கல்வித் திறத்தைக் கேள்வியுற்று அவரைக் கண்டு நட்புக் கொண்டார். அவர்தம் தமிழ் அறிவைக் கண்டு வியந்தார். மதுரையில் ஒரு தமிழ்ச் சங்கம் உள்ளது என்றும், தமிழ் அறிவுடையார் அச்சங்கத்தாரால் நடத்தப்படும் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுப் பெருமை பெறலாம் என்றும் முதலியார் நாட்டாருக்கு எடுத்துரைத்தார். இச் செய்தி நாட்டாருக்குப் புத்துணர்ச்சியை உண்டாக்கியது.

அன்று முதல் நாட்டார் அல்லும் பகலும், வெறுப்பும் சலிப்பும் இன்றிக் குன்றா ஊக்கத்துடன் "பிரவேச பண்டிதத்" தேர்வுக்குப் படித்தார். தேர்வில் முதன்மையுற வெற்றியும் பெற்றார். பரிசும் கிடைத்தது. ஊராரும் புகழ்மாலை சூட்டினர். நாட்டார் உற்சாகம் வளர்ந்தது. எடுத்த கருமத்தை வெற்றியுடன் முடித்துத் தீருவது என்ற உறுதியால் பால பண்டிதம், பண்டிதம் என்ற இரு பெருந் தேர்வுகளுக்குரிய நூல்களைப் பலரிடமிருந்து வாங்கிக் கற்று இத்தேர்வுகளிலும்

முதன்மையுற வெற்றி பெற்றுத் தங்கத் தோடாவைப் பரிசாக அடைந்தார்.

நாட்டார் அவர்களுக்கு இருபத்துமூன்றும் வயதில் திருமணம் நிகழ்ந்தது. நாட்டார் மனைவியாரும் இல் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா அருங்குணங்களையும் ஒருங்கே பெற்று, பிறந்த குலத்தையும் புகுந்த குலத் தையும் வாழ வைத்து, கணவன் கருத்தையே தம் கருத்தாகக் கொண்டு இல்லறத்தை நல்லறமாக நடத்தினர்.

நாட்டார் புலமையை நாடெல்லாம் அறிந்தது. திருச்சி ஹீபர் கல்லூரி நாட்டாரின் தமிழ்த் தொண் டைச் சின்னாள் விரும்பியது. சின்னாள் அலுவல்தானே என்று பாராமுகமாக இல்லாது அவ்வேலையை ஒப்புக் கொண்டு திறமையுடன் மாணவர்களும் கல்லூரி நடத்துவோரும் ஒருங்கே மெச்சுமாறு தொண்டு செய்தார். கோயம்புத்தூரில் சில ஆண்டுகள் தமிழ் ஆசிரியராக ஊழியம் புரிந்தார். ஆனால் நிலையாக 1910 முதல் நாட்டார், திருச்சி ஹீபர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக வேலை பார்த்தார். இங்குத் தொடர்ந்து 24 ஆண்டுகள் சேவை செய்தார்.

உண்மைத் தொண்டரை மூலை முடுக்குகளிலும் துருவித் துருவித் தேடி வரவேற்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நம் நாட்டார் சேவையை விரும்பி யது. அங்கு நம் நாட்டார் சென்று ஏறக்குறைய ஏழாண்டுகள் தமிழ் அன்னை மனங் குளிரத் தொண்டு புரிந்தார். பிறகு வேலையிலிருந்து ஓய்வு பெற்றுத் தஞ்சையில் உறைந்து வாழ்ந்து வரலானர். அங்கும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற தமிழ்க் கல் லூரிக்குத் தலைவராய் ஓர் ஆண்டு விளங்கினர். நாட் டார் சென்ற இடமெல்லாம் "பைந்நாகப்பாய் சுருட் டக்" காத்திருந்த பரந்தாமனைப் போல் தமிழன்னை

யும் பின் தொடர்ந்தாள். எங்கும் இலக்கண, இலக்கிய சைவசித்தாந்த வகுப்புக்களையும் சொற்பொழிவுகளையும் நடத்தி மக்கள் உள்ளத்தில் தமிழ்ச்சுடரை விளங்க வைத்துள்ளார்.

தமிழ்ப் பொழில், செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, சித்தாந்தம் என்ற தமிழ்ப் பத்திரிகைகளில் நாட்டார் கட்டுரைகளும் ஆராய்ச்சிகளும் வெளிவரலாயின. கபிலர், நக்கீரர், 'கள்ளர்' வரலாறுகளைச் சங்க இலக்கியக் கண்ணாடி கொண்டு கண்டு எழுதி வெளியிட்டுள்ளார். வேளிர் வரலாற்று ஆராய்ச்சியும், கட்டுரைத் தொகுதிகளும் இயற்றினர். ஆத்திசூடி முதலிய சிறு அறநூல்களுக்கும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுக்கும், திருவிளையாடற் புராணம், கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கிய நூல்களுக்கும் அழகான உரைகள் வகுத்துள்ளார்.

உரையில்லாத எண்ணற்ற தமிழ் நூல்களுக்கும் உரை வகுக்கத் திட்டம் இட்ட நம் நாட்டார் 60-ஆம் வயதில் காச நோயால் இயற்கை நிழல் எய்தினர். அவருடைய மாணவர்களில் நூற்றுக்கணக்கானவர் தமிழ்நாடெங்கும், நாட்டார் புகழையும், தமிழ்த் தொண்டையும் பரப்பி வருகிறார்கள்.

பயிற்சிகள்

1. தமிழ் மொழி கற்க இருவர் வேண்டும்-ஏன்?
2. நாட்டாரின் பிறந்த ஊர், தந்தையார், மரபு ஆகியவற்றைக் கூறுக.
3. நாட்டார் தமிழ்க் கல்வி பயின்றதைச் சுருக்கி ஒரு பத்தி எழுதுக.
4. நாட்டார் எக்கல்லூரிகளில் எல்லாம் தமிழ்த் தொண்டாற்றினர்?
5. நாட்டாரின் ஆராய்ச்சிகள் வெளி வந்த இதழ்கள் எவை?

6. கருமமே கண்ணாக, அல்லும் பகலும், வெறுப்பும் சலிப்பும் வசை இலா இசை, சான்றாண்மை, கண்காணிப்பாளர், இல்லறத்தை நல்லறமாய், துருவித் துருவித்தேடி— இத் தொடர்களை விளக்கி, தனித் தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

7. நாட்டார் இயற்றிய நூல்களையும் உரைகளையும் கூறுக.

8. இவற்றைக் கவனி:

பேசுவோன்	தன்மை
முன்னிருந்து கேட்போன்	முன்னிலை
இவையிரண்டும் அல்லாத பிற	படர்க்கை

நானும் நீயும் போவோம்
நானும் அவனும் தின்றோம்
நீயும் அவனும் தின்பீர்கள்
} என்பனபோன்று இவை விரவி வரும் போது ஏற்ற முடிபுகளைத் தர வேண்டும்.

இது போன்று தன்மை, முன்னிலை, படர்க்கை விரவிவரும் வாக்கியங்களை (எட்டுக்குக் குறையாமல்) தொகுத் தெழுதுக.

9. அண்மை, சிற்றூர், மரபு, ஆள்வினை, பெரும் பொழுது, புத்துணர்ச்சி—இவற்றின் பொருளை அகராதி கொண்டு அறிக.

6. "பாங்கு" முறை

பாங்குகளின் இன்றியமையாமை : ஒரு நாட்டிலுள்ள மக்கள் அவர்களுக்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் அவரவர்களே உண்டாக்கிக் கொள்வதில்லை. எடுத்துக்காட்டாக மக்களுக்கு வேண்டிய அரிசி, பருப்பு, பால், தயிர், நெய் முதலியவை களெல்லாம் ஒரே மனிதனால் உண்டாக்கப்படுவதில்லை. உணவுக்கு அடுத்தபடியாக உடைக்கு வேண்டிய துணிகள், குடியிருப்பதற்கு வேண்டிய வீடு முதலிய மற்ற வசதிகள் எல்லாம் ஒவ்வொருவரும் தாமே செய்து கொள்ளுவதில்லை. இவைகளெல்லாவற்றையும் உண்டாக்க, ஒவ்வொரு குடும்பத்திற்கும் போதிய ஆற்றல் இல்லை, மேலும் ஒரு மனிதன் இவையெல்லாவற்றையும் தானே செய்ய முயன்றால் அவனுடைய ஆற்றல் பல வழிகளிலும் செலுத்தப்படும். ப்பொழுது அவன் ஒரு தொழிலிலும் வல்லவனாக இருக்கமுடியாது. அதனால் தான் நம்முடைய நாட்டிற்கு வேண்டிய தேவைகள் யாவும் உண்டாக்க ஒவ்வொருவனும் ஒவ்வொரு தொழிலில் வல்லமை பெறவேண்டும். நாட்டின் தேவைகளுக்குத் தக்கபடி தொழில்கள் பிரிக்கப்பட்டுப் பொருள்களும் செய்யப்பட்டு வருகின்றன. ஆகவே, ஒவ்வொருவனும் தன்னிடத்திலுள்ள மிகுதியாயிருக்கும் பொருளைக்கொடுத்துத்தனக்கு வேண்டிய பொருளாக மாற்றிக்கொள்ள வேண்டுவது இன்றியமையாததாகிறது. இந்தப் பண்ட மாற்றுதலுக்கு ஓர் அளவுற்ற பொருள் வேண்டும். பண்ட மாற்றுதலுக்கு, அளவையாக்கப்பட்ட உலோகங்கள் நாணயங்களாக வழங்குகின்றன. இதனால் பொருளாதார வாழ்க்கையில் பணத்தின் இன்றியமையாமை நன்கு புலப்படுகிறது. பணத்தின் சிறப்பைத் தெரிந்தவர்களெல்லாம் பாங்குகளின் (Banks) இன்றியமையாமையையும் அறிவார்கள். எல்லோருக்கும், எல்லாக் காரியங்

களுக்கும் பணம் வேண்டியிருக்கின்றது. "பணம் என்றால் பிணமும் வாயைத்திறக்கும் "என்று" நமது தமிழ் நாட்டில் ஒரு பழமொழி சொல்வது உண்டு. நாட்டில் செல்வம் உண்டாக்குவதற்குஇயற்கை வளங்கள், முதல், உழைப்பு இவை மூன்றும் வேண்டும். உழவு, கைத் தொழில்கள, வாணிகம் முதலிய பொருளாதாரத் துறைகளுக்கெல்லாம் பணம் முதல் மிகவும் வேண்டப் படுவது. முதல் அல்லது பணம், பாங்குகள் மூலம் தான் கிடைக்கும். தொழில்களின் விருத்திக்கும் வாணிக வளர்ச்சிக்கும் ஏற்றபடி பணம் கொடுத்து உதவி செய்வது பாங்குகளின் சிறந்த நோக்கம்.

ஒவ்வொரு நாட்டிலும் பலவிதமான பாங்குகள் பலவிதமான நலங்களையும் முன்னிட்டு நிறுவப்பட்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை வாணிகப் பாங்குகள் (Commercial Banks). இந்தியாவில் இவை ஜாயின்ட் ஸ்டாக் பாங்குகள் என்று கூறப் படுகின்றன. இவைகளின் முறைகள் உள் நாட்டுப் பாங்கர்களின் முறைகளிலிருந்து வேற்றுமைப்படும். இவைகள், ஒரு சிலர் சேர்ந்து செய்யும் கூட்டு வாணிகம் அல்ல. இவைகளின் முதற்பணம் பலர் எடுத்துக் கொள்ளும் பங்குகளால் சேர்க்கப்பட்டவை. பலருடைய பங்குகளைக்கொண்டு இவை நிறுவப்படுவதால், இவை "சேர்ந்து உண்டாக்கப்பட்ட பாங்குகள்" (Joint Stock Banks) என்று கூறப்படுகின்றன. மேலும் இவைகளின் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, இந்த பாங்கு மூழ்கிப்போனால், இந்த நஷ்டத்தைப் பாங்கியின் பங்குக்காரர்கள் தாங்கவேண்டிய பொறுப்பின் அளவு, சட்டத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. நஷ்டமேற்பட்டால் அவர்களுடைய பங்குகளுக்கு மேல் மற்ற சொத்துக்களைத் தொடர்ந்து வசூலிக்கமுடியாது. நம் நாட்டில் இந்தப் பாங்குகள் இந்தியக் கம்பெனிச்

சட்டத்தின் [Indian Companies Act] கீழ்ப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

பாங்குகள், ஜனங்களின் சேமிப்புகளை ஒன்று சேர்க்கின்றன. அவைகள், சொத்துகளின் பேரி லும், மற்றத் தங்கம், வெள்ளி இவற்றாலான பொருள் களின் பேரிலும் கடன் கொடுக்கின்றன. மேலும், அயல் நாட்டு வியாபாரத்திற்கு உதவி செய்தல், தங்கள் உறுப்பினர்களின் சார்பில் பணம் கட்டுதல் முதலிய பலவேறு காரியங்களையும் செய்கின்றன.

முதற்பொருளைக்கொண்டும் பிறர் போட்டுவைக்கும், பணத் [Deposits] தொகைகளைக் கொண்டும், ஜாயின்ட் ஸ்டாக் பாங்குகள், வேண்டியவர்களுக்குக் கடன் கொடுத்து உதவுகின்றன. பாங்குகள் வாணிகத்துக் காகவும், கைத்தொழில்களுக்காகவும் முதல் வேண்டிய வர்களுக்கு அவரவர்கள் பொறுப்புக்கேற்றபடி கடன் கொடுக்கின்றன. சில சமயங்களில் சிலருடைய பொறுப்பின் (ஜாமீன்) பேரிலும், சொத்துக்கள் அல்லது சரக்குகள் பேரிலும் பணம் கொடுக்கப்படு கிறது. ஒவ்வோர் ஆண்டும் பாங்குகள் தங்களுடைய இலாபத்தொகைகளைப் பங்குக்காரர்களுக்குப் பிரித் துக்கொடுக்கின்றன. இலாபத் தொகையைப் பிரிப்ப தற்கு முன் பாங்கியின் வரும் கால நலத்தைக் கருதிக் காப்புப் பொருள் என்ற நிதி [Reserve Fund] திரட்டு வதற்காக இலாபத்தின் ஒரு பாகம் பிரித்துக் கொடுக் கப்படும். பாக்கியுள்ள இலாபம்தான் பிரித்துக் கொடுக்கப்படும். ஒவ்வொரு பாங்கும் ஆண்டு தோறும் ஒரு வரவு செலவுக் கணக்கு வெளியிட வேண்டும்.

பாங்குகள் தங்களுக்கு வேண்டிய பணத்தை, போட்டுவைக்கும் பணத்திலிருந்து (டெபாசிட்டுகள்) பெறுகின்றன. இப்பணத்தின் அளவு பொது மக்க

ளின் நம்பிக்கையைப் பொறுத்திருக்கிறது. ஒரு பாங்கின் மேலுள்ள நம்பிக்கை மிகுந்தால் அதற்கு மிகுந்த போட்டுவைக்கும் பணம் (டெபாசிட்டுகள்) கிடைக்கும். குறைந்த வட்டிக்கும் இப் பாங்குகளில் பணத்தைப் போட்டுவைக்க மக்கள் முன்வருவார்கள். நம்பிக்கையான இடத்தில் குறைந்த வட்டிக்குப் பணத்தைக் கொடுப்பதை மக்கள் விரும்புவார்கள். சில சமயங்களில் மிகுந்த வட்டிக்கு ஆசைப்பட்டு, முதலுக்கே கேடுவரக்கூடிய இடங்களில் சிலர் பணத்



பாங்கு

தைக் கொடுத்துவிட்டுத் துன்பப்படுகிறார்கள். ஒரு குறித்த காலத்திற்கு ஒரு குறித்த வட்டிக்குப் பாங்குகளில் போடப்படும் டெபாசிட்டுகளுக்குக் குறித்த காலம் போட்டுவைக்கும் பணம் (பிக்சட் டெபாசிட்டுகள்) என்று பெயர்.

பாங்குகள் பணத்தைக் குறைந்த வட்டிக்குப் பெற்று உயர்ந்த வட்டிக்குக் கொடுத்து இலாபம் பெறுகின்றன. டிபாசிட்டுகள் எந்தக் காலத்துக்குப் போடப் பட்டிருக்கின்றனவோ அந்தக் காலத்துக்குப் பின் தான் திருப்பிக் கொடுக்கப்படும். கேட்ட போது பணம் கொடுக்கவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் போட்டுவைக்கும் பணம் வழங்குகிற (கரன்ட் அக்கவுன்ட்) பணம் என்று சொல்லப்படும். பணம் போட்டவர், வேண்டும்பொழுது பணத்தை எடுத்துக் கொள்ளலாம். இம்மாதிரி வைப்பதற்கு வட்டி மிகவும் குறைவாகத்தான் கொடுக்கப்படும். பணம் போட்டிருப்பவர்கள் எல்லோரும் ஒரே சமயத்தில் பணத்தைத் திருப்பிக் கேட்பதில்லை. ஆகையால் இப்படிப் போடப்பட்டிருக்கும் பணத்தின் ஒரு பகுதியைத் தேவைக்காக வைத்துக்கொண்டு, மற்றொரு பகுதியைப் பாங்குகள் மற்றவர்களுக்குக் கடன் கொடுக்கப் பயன்படுத்துகின்றன.

கரன்ட் அக்கவுன்டிலிருந்து பணம் திரும்பத் தரப்படுவது பணம்தரு தாள்(செக்குகள்)களால் நடைபெறுகிறது. ரூபாய்த் தாள்கள் (நோட்டுகள்) மாதிரிகளும் பயன் படுத்தப்படலாம். நோட்டுகளை ரூபாயாக பணம்தரு தாள்களும் மற்றலாமென்ற நம்பிக்கையிருப்பதால் அவைகள் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. ஆனல் ஒரு பணம் தருதாள் மதிக்கப்படுவது அதை எழுதுகிறவனையும் பணத்தைப் பெற விரும்பும் பாங்கையும் பொறுத்தது. அந்தப் பாங்கு நல்ல நிலைமையிலிருந்து அப்பணத்தைக்கொடுக்கஆயத்தமாக இருக்கவேண்டும். பணம் தரு தாள்எழுதுபவன் கணக்கில் பணம் இருக்க வேண்டும். பணம் தருதாள் எழுதுபவன் மிகுந்த நாணயமும் பொறுப்பும் உடையவனுக இருக்க வேண்டும். பாங்கும் மிகவும் நம்பிக்கையானதாக

இருக்கவேண்டும். சிலசமயங்களில் பாங்குகள் சிலருக்கு அவர்களுக்குப் பாங்கியிலிருக்கும் பணத்தைவிட மிகுதியான தொகையைத்தர அனுமதிக்கின்றன இது கணக்கு மீறிப்பணம் வாங்குவது (over draft) என்று சொல்லப்படுகிறது.

செக்குகளை வழங்குவதால் நாணயங்களின் இன்றியமையாமையும், அவைகள் கைக்குக்கை மாறவேண்டிய தேவையும் குறையும். எடுத்துக் காட்டாக சென்னையிலுள்ள இந்தியன் பாங்கில் (Indian Bank முருகனும் இளங்கோவும் பணம் போட்டு வைத்திருக்கிறார்கள். முருகனிடம் வாங்கின சரக்குகளுக்கு விலையாக ரூ.2000-க்கு இந்தியன் பாங்கு செக்கு ஒன்று, இளங்கோ முருகனுக்குக் கொடுக்கிறார். முருகன் அதை இந்தியன் பாங்குக்கு அனுப்புகிறார். இந்தியன் பாங்குக்காரர்கள் அச் செக்கைப் பெற்றுக்கொண்டு, இளங்கோவின் கணக்கில் ரூ.2000 பற்று எழுதி, முருகன் கணக்கில் ரூ. 2000 வரவு வைக்கிறார்கள். இம்மாதிரி பணம் கை மாறாமலே, செக்குகள் மூலம் பாங்குகளின் கணக்குப் புத்தகங்களில் வரவு செலவு செய்யப்பட்டு வாணிகம் நடக்கிறது.

இவைகளைத் தவிர, கூட்டுறவுப் பாங்குகள் (Co-operative Banks) நாணயமாற்றுப் பாங்குகள் (Ex-change Banks) முதலிய பாங்குகளும் இருக்கின்றன. 1935-ஆம் வருடம் முதல் இந்தியாவில் இவைகள் எல்லாவற்றிற்கும் தலைமையாக ரிசர்வ் பாங்கு நிறுவப்பட்டிருக்கிறது. ரிசர்வ் பாங்கு கவர்ன்மெண்டாரின் வரவு செலவு முதலியவற்றைக் கவனிக்கிறது. மேலும் இந்தப் பாங்குகளின் நடவடிக்கைகளையும் கவனித்து வருகிறது. எல்லா நாடுகளிலும் தலைமை பாங்குகள் (Central Banks) இருக்கின்றன. நம்முடைய பாங்கு முறைக்குத் தலைமை ஏற்பது ரிசர்வ் பாங்கு (Reserve Bank of India). நம் நாட்டில் பொருளாதார முன்

னேற்றத்திற்காக உழைப்பதுதான் அதன் சிறந்த நோக்கம். பாங்குகளின் வளர்ச்சிக்கு நம் நாட்டில் இன்னும் மிகுந்த இடம் இருக்கின்றது.

பயிற்சிகள்

1. பாங்குகளின் சிறந்த நோக்கம் எது?
2. பண்ட மாற்று என்றால் என்ன? பண்ட மாற்றுக்கு எது வேண்டியிருக்கிறது?
3. நாட்டில் செல்வம் உண்டாக்குவதற்கு எவை வேண்டும்?
4. தேவைகளையும் நிலங்களையும் முன்னிட்டு நிறுவப் பட்டிருக்கும் பாங்குகளில் முக்கிய மானவை எவை?
5. சேர்ந்துண்டாக்கப்பட்ட பாங்கின் பொறுப் புஎவ்வாறு வரையறுக்கப் பட்டிருக்கிறது?
6. பாங்குகள் செய்யும் வேலைகள் எவை?
7. பாங்குகள் தங்கள் பணத்தை எப்படி அடை கின்றன?
8. 'குறித்த காலம் போட்டுவைக்கும் பணம்', 'உடன் தரப்படும் பணம் தருதாள்கள்'—சிறு குறிப்புகள் வரைக.
9. கணக்கு மீறிப் பணம் வாங்குவது என்றால் என்ன?
10. ரிசர்வ் பாங்கைப்பற்றி ஒரு பத்தி எழுதுக.
11. 'பாங்குகளின் நன்மைகள்' என்பது பற்றிப் பதினைந்து வரிகளில் ஒரு சிறு கட்டுரை எழுதுக.

7. வையை ஆறு

[பழைய செந்தமிழ் இலக்கியங்களில், இயற்கைப் பொருள்களாகிய கதிரவன், திங்கள், மலைகள், கடல்கள், ஆறுகள், சோலைகள், பூக்கள், பறவைகள், சுனைகள் போன்றவற்றை நேரில் காணுவதுபோல, ஓவியங்களாகப் புலவர்கள் தீட்டியுள்ளார்கள். அவைகளுள் ஒன்றாகிய பரிபாடலிற் கண்ட வையை ஆற்றின் சிறப்புகளை எளிய நடையிற் படித்து இன்புறுங்கள். மேல் வகுப்புக்குப் போனவுடன் இப்பகுதிகளை நேராகவே, செய்யுள் உருவிற் படித்து இன்புறலாம்.]

நீர்த்துளிகள் நிரம்பியிருப்பதால், இருண்ட மேகங்கள் காற்றினால் தள்ளப்பட்டு, மெதுவாக அசைந்து அசைந்து வானத்தில் செல்கின்றன. எங்கும் இருள் கவிந்திருக்கின்றது. பளிச் பளிச்சென மின்னல் தோன்றி மறைவதால் வெளிச்சமும் இருளும் மாறி மாறி உண்டாகின்றன. மேகக் கூட்டங்கள் மெதுவாகச் சென்று, குளிர்ந்த உச்சியை உடைய மலையில் மோதி, மழையாகப் பெய்கின்றன. அம்மலைச் சாரலில் தண்ணீர் சிறு சிறு அருவிகளாகப் பெருகி ஒன்றாய்ச் சேர்ந்து ஓடி வருகிறது. வரும்பொழுது மலைச்சாரலில் உதிர்ந்து கிடக்கும் பூக்களை எல்லாம் வாரிக்கொண்டு வருகின்றது. அதனோடு வரும் வழியில் ஓங்கி உயர்ந்து நிற்கும் சுரபுன்னை, நாகம், சந்தனம், தேவதாரு முதலான மரங்களை யெல்லாம் வேரோடு பறித்து உருட்டியடித்துக்கொண்டு சமவெளியை நோக்கிப் பாய்ந்து வருகின்றது. இவ்வாறு விரைவாக மலையினின்றும் இழிந்து வரும் வையையாறு, பெரும் புயற்காற்றால் கொந்தளித்து, அலைவீசி வரும் கடலைப் போலக் காணப்படுகின்றது. பெருகி வரும் இவ் வையை யாறு, பாண்டிய நாட்டின் தலைநகராகிய

மதுரை மாநகரைச் சுற்றிக் கட்டியுள்ள மதிலை இடிப் பதுபோல் மோதி உராய்ந்து செல்கின்றது.

மரங்கள் செறிந்து நிற்கும் சோலைகள்தோறும் புகுந்து, வேங்கை, சண்பகம் முதலான மரங்களை அடித் துக் கொண்டு வரும் வையை, மேடாய்க் கிடக்குமிடங் களை யெல்லாம் அழித்துப் பள்ளத்திலிட்டுச் சமப்படுத் திச் செல்கின்றது. ஆற்று நீர்ப் பெருக்கினுல் உழவர் களனைவரும் பெருமகிழ்வு கொண்டு விழா நடத்துவதற் காகப் பறை, முழவு, தண்ணுமை முதலான தோற் கருவிகளை ஒலிக்கச் செய்கிறார்கள்.

ஆடும் வகை தெரியாதவள், அரங்கில் ஆடுவ தைப்போல, வையை யாறு தான் விரும்பிய வழியெல் லாம் பரந்து செல்கின்றது. பலவகையாக, மணங் கமழும் மலர்களை அடித்துக்கொண்டு வருவதால் அவை எல்லாம் சேர்ந்த ஒரு புது மணத்தை வீசிச் செல்கி றது. அது, மணப் பொருள்களைச் செவ்வையாகக் கலக்கத் தெரியாதவன் கலந்த கலவை மணத்தைப் பேல வீசுகின்றது. ஆற்றின் நீர், அருகில் செல் லும் ஓடையில் பாய்ந்து செல்வதால் அங்கே மலர்ந் திருந்த செங்கழு நீர்ப் பூக்களையெல்லாம் மூழ்கடிக் கின்றது.

சிறு பெண்கள் மணலில் சிறு வீடுகள் கட்டி விளை யாடுகின்றார்கள். அவர்கள் அழுமாறு அம்மணல் வீடு களை எல்லாம் சிதைத்துவிட்டுச் செல்கின்றது வையை நீர். புதியதாக நடப்பட்டிருக்கும் வயலிலும், அப் பொழுதுதான் நெல்லை அறுத்துப் போட்டிருக்கும் வய லிலும் வையை நீர் புகுந்து செல்வதால், வயலுக்குடை யவர்கள் ஓலமிடுகின்றார்கள். ஊர்ப்புறங்களிலெல் லாம் நீர் பரவுகிறது. தண்ணீர் இழுத்துக் கொண்டு வரும் தென்னை, கமுகு முதலானவற்றின் பாளைகளைப் பழனங்களில் திரியும் வாளை மீன்கள் கௌவுகின்றன.

வயல்களில் நீர் பரந்து செல்வதால், நாற்று விடுவதற்குச் செப்பனிடப்பட்ட நாற்றங்கால்களெல்லாம் மணல் மேடாகின்றன. வயிறு நிறைய உண்டு மகிழ்ந்திருந்த உழவர்களெல்லாம் தொழில் புரிவதற்காக வயலில் செல்கின்றனர்கள்.



பூங்காவினூடே வையை ஆறு

வெள்ளத்தால் அறுக்கப்பட்டும், மலைகள் போல உயர்ந்தும், காவல் செய்யும் இரு கரைகளுக்கிடையில் வையையாறு நுரைக் கூட்டங்களையும்,மலர்க் கூட்டங்களையும் சுமந்து செல்கிறது. ஆற்றின் கண்ணே நீராடும் மக்கள் அணிந்திருந்த மலர் மாலைகளைப் பறித்துக் கொண்டு அவர்களின் தலைகளிலும் காதுக்களிலும் பசிய இளந்தளிர்களைச் செருகிச் செல்கின்றது.

கொடை வள்ளலாகிய பாண்டிய மன்னன் கைபோல இருக்கிறது என்று கண்டார் சொல்லும்படியாக, மேகந்தவழும் மலையிலிருந்து மிளகு, சந்தனம் முதலானவற்றை அடித்துக்கொண்டும், தயிர்கடையுங் கால் நுரைத்தெழும் வெண்ணெயைப் போல் நுரைக் கூட்டங்களைச் சுமந்து கொண்டும் வையையாறு, குறையாது மேலும் மேலும் பெருகுகின்றது.

தண்ணீர்த் துறை, வீட்டு வாயிலுக்கு அருகில் இருக்கிறது. வையை நீர் பலவகையான முத்துக்கள், பொன்னணிகள் முதலியனவற்றைச் சுமந்து, கலங்கி வலமாகச் சுழித்து வருகின்றது. துறையில் புனலாடும் புதல்வர்கள் தலையிலணிந்த அணியிலுள்ள மணிகளையும் பறித்துக் கொண்டு செல்கின்றது.

மரங்கள் உதிர்த்த மலர், நீராடுவோர் கழித்த மலர் இவற்றைச் சுமந்து செல்லும் வையை நீர் வயல்களில் நிறைவதால் மத்தளம் முதலிய இயங்கள் ஒலிக்க மகளிர் ஆடுகின்ற அரங்கினைப் போலக் காணப்படுகின்றது.

பூங்காவில் பாய்வதால் அங்குள்ள மரங்களிலெல்லாம் தேன் நிறைந்து வண்டினங்கள் நெருங்கி மொய்க்கும் நரந்தம் முதலான மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. சோலைகள் தமக்கு நீர்வளம் நிறையத் தந்துதவிய வையைக்கு விருந்திடுவது போலப் பூத்துச் சொரிகின்றன. வையை நீர் நிறைந்து பரந்து வருதலால், காவும், கழனியும், பொழிலும், கயங்களும், ஆற்றிடைக் குறைகளும் மதுவுண்ட வண்டுகள் மகிழ்ந்து பாடப் பொலிவுற்று விளங்குகின்றன.

மலையிடைப் பிறந்து, கரையிலிருக்கும் மரங்களின் பூக்களால் அழகுபெற்று. நீராடுவோர்கள் இட்ட மணிப் பூவாடை போர்த்து விண் மீன்களாகிய முத்துப்

பூத்து விளங்கும் வானத்தில் கங்கை சென்றாற் போல வையை யாறு வண்டுகள் ஒலிக்கச் செல்கிறது.

பயிற்சிகள்

1. பளிச் பளிச்சென, அலைவீசி, செறிந்து, அரங்கின்;ஓலமிடு,செப்பனிடப்பட்ட, தோற் கருவிகள், ஆற்றிடைக்குறை—இத்தொடர் களை விளக்கித் தனித்தனியே வாக்கியத்தில் வைத்து எழுதுக.

2. கொங்களித்து, உராய்ந்து, பொழில், இயம், கா,இழிந்து, கமுகு, கவிந்து, கழனி—இவற் றிற்குப் பொருள் எழுதுக.

3. பொலி, கழி, ஒலி, பொழி, களி, ஒளி, ஒழி | இவை தம்முள் உள்ள பொருள் வேற்றுமை யைக் கவனிக்க.

இதுபோல், இப்பாடத்திலும், பிற பாடங் களிலும் வருகின்ற ல. ழ. ள பயிலும் சொற் களை அவற்றோடு ஒத்த சொற்களோடு இணை இணையாக எடுத்தெழுதிப் பொருள் வேற்று மையும் காட்டுக.

4. மெதுவாக+சென்று=மெதுவாகச் சென்று
மெல்ல+பேசினான்=மெல்லப் பேசினான்
ஓடி+திரிந்தது = ஓடித்திரிந்தது.
பாடி+காட்டினான்=பாடிக்காட்டினான்.

இவற்றுள் அ. இ என்பதில் முடிகின்ற வினை யெச்சங்களுக்கு முன் வருகின்ற வல்லினம் மிகுவதைக் காண்க. இதுபோல் மிகும் வேறு சில எடுத்துக் காட்டுகளைத் திரட்டி எழுதுக. இன்னும் வேறுவகை, வினையெச்சங்களுள் வல்லினம் மிகுவதைக் கண்டு எழுதுக.

5. சமவெளி நோக்கிவரும்போது வையை ஆறு எவற்றை உருட்டியடித்துக் கொண்டு வருகிறது.
6. யார் வையைக்கு விழா நடத்துகிறார்கள் ?
7. யார் ஓலமிடுகிறார்கள் ? ஏன் ?.
8. நுரைக் கூட்டங்களைச் சுமந்து செல்வதும், உதிர்ந்த மலர்களையும் நீராடுவோா கழித்த மலர்களையும் சுமந்துசெல்வதும் எவைபோல் இருக்கின்றன ?
9. நீர் நிறைந்து பரந்து வருதலால் எவை பொலிவுற்று நிற்கின்றன ?
10. சோலைகள் தமக்கு நீர்வளம் நிறையத் தந்து தவிய வையைக்கு விருந்து இடுவதுபோலப் பூத்துச் சொரிகின்றன. இக்கலவை வாக்கியத்தை இரண்டு அல்லது மூன்று தனி வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக.
11. "வானத்தில் கங்கை சென்றாற்போல" வையை போனதை விளக்கிக் கூறுக.
12. (1) வையை ஆறு சுமந்து கொண்டுவருகிறவை. (2) உழவர்கள் செயல்கள் ஆகியவற்றைப் பற்றி ஒவ்வொரு பத்தி எழுதுக. (எட்டு, எட்டு வரிகள்).
13. கவிந்து, இழிந்து, செறிந்து ,பரந்து, கமுகு, கயம், கா, இவற்றின் பொருள்களை அகராதி கொண்டு அறிக.

———

8. சர். ஜகதீச சந்திர போஸ்

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வோர் அறிவியல் துறையில் சிறப்புப் பெற்றவர் இருத்தல் உண்டு. அங்ஙனமே நம் இந்தியாவிலும் கைத்தொழில் சிறப்பை விளக்கியவர் ஜா. ந. டாட்டா; அறிவியல் துறையில் புகழ் பெற்றவர் சர். சி. வி. இராமன், ஆச்சாரிய பி. ச. ரே. என்பவர்; ஞான மார்க்கத்தில் சிறந்தவர் காந்தியடிகள், டாக்டர் இரவீந்திரநாத தாகூர்; பயிர் நூல் ஆராய்ச்சியிற் சிறந்து விளங்கியவர் சர். ஜகதீச சந்திர போஸ். இவர் உலகம் வியக்குமாறு எவருங் கண்டும் கேட்டும் இராத பல வியக்கத்தக்க ஆராய்ச்சிகளைச் செய்து காட்டியவர்.

இப்பெரியவர் வங்காள மாகாணத்தைச் சேர்ந்தவர்; உயரிய குடும்பத்திற் பிறந்து வளர்ந்தவர்; இளமையிலேயே ஊக்கம், உழைப்பு முன்னுக்கு வரவேண்டும் என்னும் பேரவா, அதற்குரிய சலியா முயற்சி ஆகிய நல்லியல்புகள் வாய்க்கப்பெற்றவர். இவர் பி. ஏ. பட்டம் பெற்றதும், அறிவியல் துறையில் உயர்தரப் பட்டம் பெற இல்கிலாந்து சென்றார்; இலண்டன் பல்கலைக்கழகத்திற் சேர்ந்தார்; 1895-ஆம் ஆண்டு இயற்கை அறிவியலில் பி. எஸ். ஸி. (B. Sc.) என்னும் பட்டம் பெற்றார்.

பட்டம் பெற்ற போஸ், கல்கத்தாவை அடைந்து, மாகாணக் கல்லூரியில் பேராசிரியராய் அமர்ந்தார்; ஓய்வு நேரங்களில் இயற்கை நுட்பம் பற்றிய ஆராய்ச்சிகள் நடத்தினார்; தாம் செய்த ஆராய்ச்சிகளை அவ்வப்போது பத்திரிகைகள் வாயிலாக வெளியிட்டார். இவர் மின்சார அலைகளைப் பற்றித் தீவிர ஆராய்ச்சி செய்தார்; அது பற்றிய விளக்கங்களை இங்கிலாந்தில் உள்ள இராயல் சங்கப் பத்திரிகையில் வெளியிட்டார். அக்

கட்டுரையே முதன் முதல் போஸுக்குப் பெரும் புகழ் தந்தது. அதனைப் படித்த மேனாட்டு அறிஞர்கள் போஸைப் போற்றி வாழ்த்துச் செய்திகள் அனுப்பினர்.

மேனாட்டார் சிலர் அவர் ஆராய்ச்சிகட்குப் பொருள் உதவியும் செய்தனர். வங்க அரசாங்கம் அவருக்கு வேண்டும் ஆராய்ச்சி பற்றிய வசதிகளை அளித்தது; அவரது ஆராய்ச்சித் திறனை வியந்த இலண்டன் பல்கலைக் கழகத்தார் அவருக்கு டி.எஸ். ஸி. என்னும் பெரிய பட்டத்தை அளித்துப் பெருமைப் படுத்தினர்.

அக்காலத்தில் மின்சார அலைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்தவர் உலகிலேயே மூவராவர். ஒருவர் ஆங்கிலேயர்; ஒருவர் அமெரிக்கர்; ஒருவர் நம் போஸ். இம்மூவருள்ளும் மிகச் சிறந்த ஆராய்ச்சிகள் செய்து வெளிப்படுத்திப் புகழ் பெற்றவர் போஸே ஆவர். இவர் 1895-ஆம் ஆண்டில் தாம் கண்டறிந்த புதுமைகளைக் கல்கத்தா கவர்னர் தலைமையில் செய்த அரிய சொற்பொழிவுகள் வாயிலாக வெளிப்படுத்தினர். இதனால் இப்பெரியவர் பெயரும் புகழும் உலகெலாம் பரவின.

போஸ்1897-இல் இலண்டன் இராயல் கழகத்தார் வேண்டுகோளுக்கு இணங்கி இலண்டன் சென்றார்; அறிவியல் அறிஞர் பலர் கூடிய பேரவை ஒன்றில், தாம் கண்டறிந்த மின்சார அலைகளைப் பற்றிய சோதனைகளை விளக்கமாகச் செய்து காட்டினர். இவருடைய ஆராய்ச்சிகளைக் கண்ட அறிஞர்கள் இவரை வியந்து பாராட்டினர்கள். பிரிட்டிஷ் பத்திரிகைகள் எல்லாம் இவர் படத்தையும் ஆராய்ச்சிகளையும் வெளியிட்டுப் பெருமைப் படுத்தின. 1901-ஆம் ஆண்டிலும் போஸ் அதே கழகத்தில் தமது இரண்டாம்

சொற்பொழிவை நிகழ்த்திப் பெரும் புகழோடு தாய் நாடு மீண்டார்.

போஸ் 1915-இல் இலண்டன் சென்று அதே இராயல் கழகத்தில் செடிகொடி பற்றிய ஆராய்ச்சிகளைப் பற்றிப் பேசினர். அவ்வாராய்ச்சிக்கு உரிய நுட்பமான கருவிகள் இந்தியாவிலேயே செய்யப்பட்டவை என்பதை அறிந்த மேனாட்டார், பெருவியப்புக் கொண்டனர். விலங்கிற்கும் செடி கொடிகட்கும் நரம்பு பற்றிய நுட்பங்கள் ஒருபடித்தானவையே என்பதைப் போஸ் மெய்ப்பித்துக் காட்டினர். இச்செயல் ஒன்றே இவரை உலகிற் சிறந்த பயிர் நூல் அறிஞராகச் செய்தது. இவருக்கு முன் பலர் இத்துறையில் ஆராய்ச்சி செய்திருந்தும், போஸைப் போலத் தெளிவாக விளக்கக் கூடவில்லை. போஸ், தாம் கூறிய ஒவ்வொன்றையும் செய்து காட்டி மெய்ப்பித்ததே அவரது பெரும் புகழுக்குக் காரணமாகும்.

போஸ் வியானவில் பேசிய போது தலைமை தாங்கிய பேராசிரியரான மாலிஷ் என்பார், போஸுக்கு நன்றி கூறுகையில், "புதிய ஆராய்ச்சிகளில் உலகிற் சிறந்து விளங்கும் ஒப்பற்ற அறிஞராகிய டாக்டர் ஜகதீச சந்திர போஸைப் பெற்ற இந்திய நாட்டுக்கு மேனாடுகள் நன்றி செலுத்தும் கடப்பாடுடையன" எனப் புகழ்ந்து பேசினர்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு போஸ், அமெரிக்கா சென்றார்; காலிபோர்னியா, நியூயார்க், ஹார்வார்ட், சிகாகோ, கொலம்பியா முதலிய பல்கலைக் கழகங்களில் தம் ஆராய்ச்சி பற்றிய சொற்பொழிவுகள் செய்து புகழ்பெற்றார். அவரைப் பாராட்டாத அமெரிக்கர் இல்லை. போஸ், பின்னர்ப் பிரான்சு நாட்டுத் தலைநகரம் ஆகிய பாரிஸ் சென்று, பிரஞ்சு நாட்டறிஞர் வியந்து போற்றத் தம் ஆராய்ச்சிச் சொற்பொழிவுக

ளைச் செய்தார்; பின்பு ஜப்பான் தேசத்துத் தலைநகர மாகிய டோக்கியோ சென்று, சொற்பொழி வாற்றி இந்தியா மீண்டார்.

இவர் உலகப்புகழ் அடைதலைக் கண்ட கல்கத்தா, பஞ்சாப் முதலிய மாகாணப் பல்கலைக் கழகங்கள் போஸைப் பெருமைப்படுத்தின; அவரது ஆராய்ச் சிக்கு வேண்டிய பொருள் உதவியும் செய்தன. வங்க அரசாங்கம் போஸுக்கு வாழ்நாள் வரை முழுச்சம் பளம் தரத் துணிந்தது; இவருக்கு 'சர்' என்னும் மேதகு பட்டத்தையும் அளித்து மகிழ்ந்தது. இந்திய அரசாங்கமும் இவருக்குப் பல வழிகளிலும் உதவி செய்ய முன் வந்தது. 1900-இல் பாரிசில் நடைபெற்ற அறிவியற் பேரறிஞர் மாநாட்டுக்கு இந்திய அரசாங் கம் போஸை அனுப்பியது; 1903-இல் இவருக்குச் சி. ஐ. இ. (C.I.E.) என்னும் பட்டத்தையும் 1911-இல் சி. எஸ். ஐ. (C.S.I.) என்னும் பட்டத்தையும் தந்து மகிழ்ந்தது.

'செடிகொடிகட்கு உயிர் உண்டு; அவற்றுக்கும் நம்மைப் போலவே இன்ப துன்பங்கள் உண்டு. அவை யாவும் நம்மைப் போலவே குறிப்பிட்ட நேரத்தில் தூங்கி விழிக்கின்றன. மரங்களை மயக்க மருந்தால் மயக்கமுறச் செய்து, அவற்றைப் பெயர்த்து வேறு இடங்களில் நட்டு, மயக்க மருந்தை நீக்கிவிடின், அவை நன்றாய்ச் செழித்து வளரும்' என்பன போன்ற வியக் கத் தக்க செய்திகளை நேராகச் செய்து, யாவரும் நம்பும்படி காட்டியதே போஸின் புகழுக்குக் காரண மாகும். சிறந்த இந்த ஆராய்ச்சிகளை இந்திய வைசி ராயாக அப்போது இருந்த செம்ஸ்போர்டு பிரபுவே நேரிற் கண்டு திகைத்தார் எனின், போஸின் ஆராய்ச் சித் திறனை என்னென்பது! போஸ் கல்கத்தாவில் பெரிய ஆராய்ச்சிக் கூடம் ஒன்று அமைத்தார். அதில் மேனாட்டு மாணவரும் வந்து ஆவலோடு ஆராய்ச்சித்

துறையில் பழகினர். மெய்யாகவே போஸின் ஆராய்ச்சிகளால் இவ்வரைப் பெற்ற நம் தாய்நாடு பெருமை அடைந்தது என்பதில் ஐயமே இல்லை. இவர் இத்துணைச் சிறப்பு வாய்ந்திருந்தும் பணிவு, அடக்கம், அன்பு முதலிய குணங்கள் சிறக்கப் பெற்று இருந்தார். 'இந்தியர் பலர் இத்துறையில் ஆராய்ச்சிகள் செய்து, இந்திய நாட்டை உலகிடைச் சிறப்புறச் செய்தல் வேண்டும்; பண்டை இந்தியா அறிவியல் துறைகளில் பெயர் பெற்றது. பண்டை முனிவர்களும் சித்தர்களும் மனிதனைச் சாகவும் வாழவும் செய்ய வல்லவர்; முனிவர் அறிவியல் துறைகள் பலவற்றில் சிறந்து விளங்கினவர். அப்பழம் பெருமையை நம்மவர் இனிப் புதுப்பிக்க வேண்டும். இத்துறையில் இந்தியர் ஊக்கங் காட்டி உழைக்க வேண்டும்' என்று போஸ் அடிக்கடி சொல்வது வழக்கம். மாணவராகிய நீங்கள், இப்பெரியாரது விருப்பத்தை நிறைவேற்றக் கடமைப்பட்டு இருக்கிறீர்கள் அல்லவா?

பயிற்சிகள்

1. உலகப் புகழ் வ ய்ந்த இந்தியர் யாவர்? அவர் எவ்வெத்துறையில் புகழ் பெற்றவர்?
2. போஸ் செய்த ஆராய்ச்சிகள் எவை?
3. போஸ் எவ்வெவ்விடங்களில் சொற்பொழிவு ஆற்றினர்?
4. இவர் பெற்ற பட்டங்கள் எவை?
5. இவரது ஆவல் யாது?
6. நீங்கள் அறியும் போசினது நற்பண்புகள் யாவை?

7. சலியா முயற்சி, பல்கலைக்கழகம், அறிவியல் துறை, வியக்குமாறு, நல்லியல்புகள், ஆராய்ச்சித் திறன் - இச்சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

8. வெளியிட்டார், அவ்வப்போது, செய்திருந்தும், அறிஞராகிய-பிரித்துக் காட்டுக.

9. வியக்கத்தக்க செய்திகளை நேராகச் செய்து யாவரும் வியக்கும்படி செய்து காட்டினார்: பெயரெச்சங்களையும் வினையெச்சங்களையும் சுட்டுக.

10. இப்பாடத்தின் 3-ஆம் பத்தியில் உள்ள வினைமுற்றுக்களை எழுதுக; அவற்றின் காலங்கள் கூறுக. அவற்றில் உள்ள காலம் காட்டும் இடைநிலைகளைக் கூறுக.

11. இப்பாடத்திலிருந்து ஐம்பால்கட்கும் இரண்டிரண்டு எடுத்துக்காட்டுதருக.

II. செய்யுள் பகுதி

[சிறப்பு]

I வாழ்த்துப் பகுதி

1. பொதுமை வேட்டல்

காலையி லெழுந்து கடன்களை முடித்துக்
காற்றிலுங் கதிரிலுங் குளித்துச்
சோலையி லுலவிச் சுரக்குநீ ராடித்
தொழுதுனைச் சிந்தனை செய்து
சீலமும் நலமும் சேருண வருந்திச்
சீர்தொழில் பிறர்க்கென ஆற்ற
மேலவர் கொண்ட வேர்நெறி யோங்க
வேண்டுவன் கருணைசெய் இறையே.

—திரு. வி. க.

பொது நோக்க நன்னெறியை, வளர்த்துவரும் இந்நாட் பெரியார்களில் சிறந்தவர் திரு. வி. க. சென்னை, இராயப்பேட்டையில் இருக்கின்றார். 'தமிழ்ப் பெரியார்' என்று சிறப்பாக அழைக்கப்படுவார். அருள் கனிந்த நெஞ்சும், எளிய வாழ்க்கையும், தூய உள்ளமும் உடையவர். தமிழ் மொழிக்கும், நாட்டிற்கும் எண்ணற்ற தொண்டாற்றியுள்ளார். இவர் எழுதிய நூல்களும், கட்டுரைகளும், கவிதைகளும், ஆற்றிய சொற்பொழிவுகளும் ஏட்டிலடங்கா. இப்பாடல் அவர் இயற்றிய 'பொதுமை வேட்டலி'ல் உள்ளது. பாட்டைப்படித்து இன்புற்று அதன்படி நடப்போமாக.

கடன்கள்-காலைக்கடன்கள். வெளிக்குப் போதல், பல் விளக்குதல், குளித்தல், துணி தோய்த்தல், கடவுள் வழிபாடு, படித்தல், அன்றாட வேலைகளைச் செய்யத் தொடங்கல் முதலியன. கதிரிலும் - (கதிரவனுடைய) ஒளிக்கதிர்கள் மேலே படும்படி உடம்பைக் காட்டி. சுரக்கும்-ஊறிவரும். சீலம்-ஒழுக்கம்; அதாவது தூய்மை. நலம்-நன்மை; அதாவது உடம்பை

வளர்க்கும் பல பொருள்களும் கலந்துள்ள நலம் (மாவுப் பொருள், புரதைப் பொருள், கொழுப்பு, உப்புகள் உயிரச் சத்துகள் முதலிய பல நலமும் வாய்ந்த). சீர் தொழில் பெருமை பொருந்திய தொழில்; தனக்கெனவே வாழாது பிறர்க்கெனவும் வாழ்ந்து தொண்டாற்றவேண்டும். வேர் நெறி-அடிப்படையான (ஒழுக்க) நெறி. இறையே-கடவுளே! இறை-எல்லாப் பொருள்களிலும் தங்குபவன்.

2. மொழி அரசி

தமிழ்த்தாய் வாழ்த்து

தமிழே, தமிழே, தமிழர்க் குயிரே,
அமுதே, யழகே, யன்பே, யருளே,
சங்கரன் போற்றிய சங்கத் தமிழே,
மங்கலம் பொலியும் மாமணி விளக்கே,
பாண்டியன் வளர்த்த பச்சிளம் செல்வீ,
வேண்டிய வளங்கள் ஈண்டிய திருவே,
பொதிகைத் தென்றலும் பொன்னியும் வைகையும்,
எதுகை மோனையோ டேத்திடுந் தமிழே,
செவிக்கினி தாகிய கவிக்கனி குலுங்கும்
புவிக்கினி தாகிய புண்ணியத் தமிழே,
சித்தர் பாடிய சித்திரத் தமிழே,
புத்தொளி பரவும் பூரணத் தமிழே,
முருகன் மொழிந்த முழுநிறைத் தமிழே,
அருகர், புத்தர், கிறித்தவர், இசுலாம்,
மதத்தினர் எல்லாம் துதித்த நற்றமிழே,
மதவரை கடந்த பொதுமறைத் தமிழே,
பனிவரை யுச்சியிற் படாம்விரி தமிழே,
முனிவர்கை தவழ்ந்த மோகனத் தமிழே!

—சுத்தானந்த பாரதியார்

சாமி வேலாயுதம் பிள்ளையவர்கள் தொகுத்து, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்ட 'மொழி அரசி'என்னும் நூலில்உள்ள இது,சுவாமி சுத்தானந்த பாரதியார் எழுதியதாகும். இவர் சிவகங்கைக் கருகில் உள்ள பனையூர் சடாதர ஐயர் மகனாய், 1897-இல் பிறந்தார். இவர் தமிழ், ஆந்திரம், வங்காளம், இந்தி, ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய பன்மொழி யறிந்த புலவர். இளமையிலேயே துறந்து, இரமண அடிகள் அரவிந்தர் முதலியோர்பால் பயின்றவர். இவரியற்றிய நூல்களே ஒரு தனி நூல் நிலையமாக விளங்கத்தக்கன. இவர் இயற்றிய கவிதைகள், மொழி பெயர்ப்புகள். கதைகள், கட்டுரைகள், வரலாறுகள், ஆராய்ச்சி நூல்கள் முதலியன எண்ணிறந்தன.புதுவையில்,அரவிந்தர் தவக்குடிலில், தவ வாழ்க்கை மேற்கொண்டு நூல்கள் இயற்றிக் கொண்டே தமிழ்மொழிக்கும், நாட்டுக்கும் சமயத்திற்கும் தொண்டாற்றி வருகின்றனர். இவர் இயற்றிய பைந்தமிழ்ச் சோலை, தமிழ்க்கனல், தமிழுணர்ச்சி, திருக்குறள் இன்பம் போன்ற நூல்கள் மிகச் சிறந்த தமிழ்ப் பற்றுடையனவாகும்.

ஈண்டிய-நிறைந்த, பொன்னி- காவிரியாறு, எதுகை மோனையோடு - இவ்வாறுகளின் நீரோட்ட ஓசை எதுகை மோனையோடு தமிழ்ப்பாட்டிசைப்பது போலிருக்கிறது. ஏத்திடும்-போற்றிடும். சித்திரம்-அழகிய, பலவகை அழகுகள் வைத்துப் பாடும் பாடல்கள் சித்திரக்கவிகள் எனப்படும். புத்தொளி-புதிய ஒளி. பூரணத் தமிழ் - முழுத்தமிழ். இசுலாம் - (இஸ்லாம்) மகம்மதியம். மதவரை-சமய எல்லை (பல சமய வேறுபாடுகள் எல்லாம்). கடந்த-தாண்டிய. படாம்-ஆடை (கொடி).

3. தமிழ்த்தாய்

(முன்னையிலங்கை என்ற பாரதி பாட்டு மெட்டு)

பன்மொழி பெற்றும் இளமை குன்றாதிந்தப்
பாரினில் ஓங்குவ தார்?—உயர்
இன்ப வடிவினள் எண்ணில் வயதினள்
எங்கள் அருந்தமிழ்த் தாய்.

வெள்ளி மலைவரை வெற்றியைக் கொண்ட மூ
வேந்தரை ஈன்றவள் யார்?—கலை
அள்ளித் தெளித்தவள் ஞான விளக்கெங்கள்
ஆவி யருந்தமிழ்த் தாய். 2

ஆழிகள் தாண்டிமுன் வாணிபம் செய்தோரை
அன்புடன் ஈன்றவள் யார்?—புவி
வாழ்விற் கணிகலம் நீதிவழங்கிடும்
மங்கை அருந்தமிழ்த் தாய். 3

பாரியை ஆயைக் குமணனை நள்ளியைப்
பாருக் களித்தவள் யார்?—மிகு
சீரும் சிறப்புடை வண்மைக் கடல் எங்கள்
செல்வி அருந்தமிழ்த் தாய். 4

தெய்வப் புலவரை பக்தரை சித்தரை
செல்வரை, ஈன்றவள் யார்?—உயர்
மெய்ம்மை வடிவினள் வீரரை ஈன்றவள்
மேன்மை மிகுந்தமிழ்த் தாய். 5

வாழிய அற்புத சக்திகொள் அன்னைநீ
வாழிய வாழியவே —என்றும்
வாழிய எண்டிசை யும்புகழ் வீசியே
வாழிய வாழிய வே! 6

—முத்து. கண்ணப்பர்

இதன் ஆசிரியர் திருவான்மியூர் முத்து கண்ணப்பர். இவர் மொழிப் பற்றும் நாட்டுப் பற்றும் மிக்கவர்; பொதுநலத் தொண்டில் விருப்ப முள்ளவர்; இளமையிலிருந்தே கவிதை புனைவதில் ஆர்வம் கொண்டவர். இப்போது திருமயிலை பின்னத்தூர் சுப்பிரமணியம் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராயுள்ளார். இவர் சாரணர்ப் பாடல்களும் ஊக்க வொலிகளும், வயதுவந்தோர்கல்விமுறை முதலிய நூல்களும், 'அவ்வைதாசன்' என்ற புனை பெயரில் பல கவிதைகளும் கட்டுரைகளும் இயற்றியுள்ளார்.

வெள்ளிமலை-இமயம். மூவேந்தர்-சேர, சோழ, பாண்டியர். ஞானவிளக்கு-அறிவுச்-சுடர். ஆழிகள்-கடல்கள். மெய்ம்மை வடிவினள்-உண்மையே உருவானவள். எண் திசை-எட்டுத்திசை.

4 தமிழ் நாடு

(கல்லார்க்கும் கற்றவர்க்கும் என்ற பண்ணைப் பாடுக)

பாரோங்கு புகழ்படைத்த பைந்தமிழ்நன் ஞடு
பாக்குபலா மாவாழை பலசெழித்த நாடு
ஏரோங்கு பூங்காவோ(டு) எழில்வனங்கள் மலைகள்
என்றும்வெள்ளம் பாய்நதிகள் எங்கும்நிறை நாடு
சீரோங்கு கம்பன், அவ்வை திருவள்ளுவர் இளங்கோ
தேசியக் கவிபாரதி திகழ்ந்ததெங்கள் நாடு
பாரோங்கு வள்ளல்மன்னர் பலர்வாழ்ந்த நாடு
பல்லாண்டு வாழ்கவெங்கள் பைந்தமிழ்நன் ஞடே.

—முத்து. கண்ணப்பர்.

பார்-பூமி. பைம் தமிழ்=பசுமை+தமிழ்; பூங்கா-பூஞ்சோலை. எழில்-அழகு. வனங்கள்-காடுகள். திகழ்ந்தது-விளங்கியது. வள்ளல்-கொடையாளி.

II. அறவுரைப் பகுதி

1. திருக்குறள்

கல்வி

கற்றலும் நிற்றலும்

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. 1.

எண்ணும் எழுத்தும்

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. 2.

கண்ணும் புண்ணும்

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 3.

புலவர் கூடுதலும் பிரிதலும்

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 4.

கற்றாரும் கல்லாதாரும்

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர். 5.

கேணியும் அறிவும்

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. 6.

கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு. 7.

ஒருமையும் எழுமையும்

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து. 8.

தாமின்புறுவதும் உலகின்புறுவதும்

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். 9.

கல்வி அழியாச் செல்வம்

கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை. 10.

நட்பு

செயற்கரியது நட்பு

செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு. 1.

பிறையும் நட்பும்

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு. 2.

நூல் நயமும் நட்பும்

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு 3.

நகுநட்பும் இடிக்கும் நட்பும்

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு. 4.

உணர்ச்சியும் நட்பும்

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும். 5.

முகம் நகுவதும் அகம் நகுவதும்

முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகம்நக நட்பது நட்பு. 6.

அழிவின்கண் நட்பு

அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு. 7.

கையும் நட்பும்

உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே 8.
யிடுக்கண் களைவதாம் நட்பு.

நட்பின் வீற்றிருக்கை

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி 9.
ஒல்லும்வா யூன்று நிலை.

புல்லென்ற நட்பு

இனையர் இவரெமக் கின்னம்யாம் என்று 10.
புனையினும் புல்லென்னும் நட்பு.

—திருவள்ளுவர்

திருக்குறள், கடைச்சங்க காலத்தில் தோன்றிய "பதினெண் கீழ்க்கணக்கு" என்னும் தொகுதியில் ஒன்றாகும். குறள் வெண்பாக்களால் ஆகியதனால் இது குறள் என்னும் பெயர் பெற்றது. திரு என்னும் அடைமொழி சிறப்புக்கருதிச் சேர்க்கப்பட்டது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகளையும், 133 அதிகாரங்களையும் கொண்டுள்ளது. ஒவ்வோர் அதிகாரத்திலும் பத்துக் குறள்கள் உள்ளன. திருக்குறள் எல்லோருக்கும் உரிய பொது மறை. இதைத் திருவள்ளுவர் இயற்றினர்.

கல்வி

1. கசடற - பழுதற - (குற்றமற). தக - தக்கபடி (நன்னெறியிலே).

2. எண் - கணக்கு. எழுத்து - எழுத்துப் படிப்பு, (மேல் படிப்பிற்குத் தர்க்கமும், இலக்கணமும்) ஆகும்.

4. உவப்ப - மகிழும்படி. தலைக்கூடி - தம்மோடு கூடியிருந்து. உள்ள - (எப்போது மீட்டும் காண்போமோ என்று) நினைந்துவருந்த. புலவர் - கற்றவர்.

5. உடையார் - செல்வம் உடையவர். இல்லார்- செல்வம் இல்லார் (வறியர்). ஏக்கற்றும்- தாழ்மையாக நடந்துகொண்டும்.

6. தொட்டனைத்து - தோண்டின அளவுக்கு. ஊறும் - நீர் சுரக்கும். கற்றனைத்து - படித்த அளவுக்கு.

7. கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு. சாந்துணையும் - சாகும் வரையில். என்? - என்ன காரணம் (யாது கருதி.)

8. ஒருமைக்கண்-ஒருபிறப்பில் எழுமையும்-ஏழு வகைப் பிறப்பிலும். ஏமாப்பு - பாதுகாக்கும் சிறப்பு.

9. காமுறுவர் - (தாம் இன்பமடைதலை) விரும்புவர்.

10. கேடில் - அழிவில்லாத. விழு - உயர்ந்த. மாடு - நிலைத்த செல்வம்.

நட்பு

1. செயற்கரிய - பெற்றுக் கொள்வதற்கு அருமையானவை. வினைக்கரிய - எதிரிகள் செயலைத் தடுப்பதற்கு அருமையான பாதுகாப்புகள். யாவுள- எவை இருக்கின்றன.

2. பிறைநீர - வளர்பிறைச்சந்திரனது தன்மையுடையது (மேலும் மேலும் வளரும்). நீரவர் - நல்லியல்புடையார்.மதிப் பின்னீர-தேய்பிறையின் தன்மை உடையது.

3. நூல்நயம்-நல்ல நூலின் நயம். (படிக்கப் படிக்க மிகுந்து விளங்கும்.) பயில்தொறும் -பழகும் போதெல்லாம். பண்புடையார் -நற்குண முடையார்.

4. நகுதற்பொருட்டு - சிரித்து விளையாடுவதற்காக. மிகுதிக்கண் - அளவுக்கு மிஞ்சிய செய்கை ஏற்படக் கூடிய பொழுது. மேற்சென்று - முற்பட்டு. இடித்தற் பொருட்டு - கடிந்துரைப்பதற்காகவேயாம்.

5. புணர்ச்சி - தொடர்பும் (ஓர் ஊர் - ஒரு குலம் முதலிய தொடர்பு). பழகுதல் - நெடுநாட் பழக்கமும். உணர்ச்சி - மன உணர்ச்சி. கிழமை - உரிமை.

6. முகம் நக-கண்ட விடத்து முகம் மலரும்படி. அகம் நக-உள்ளம் மலரும்படி.

7. அழிவின்-கெடுதி வருங்கால். ஆறுய்த்து-நல்ல வழியிற் செலுத்தி. அழிவின்கண் - கேடுவந்தபோது. அல்லல்-துன்பம். உழப்பதாம்-(தாமும்) உறுவதாம்.

8. உடுக்கை-உடுக்கும் உடை. இடுக்கண்-துன்பம். களைவது-நீக்குவதே.

9. வீற்றிருக்கை-அரசிருக்கை (சிறப்பு. கொட்பின்றி-எக்காலத்தும் மாறுபடாமல். ஒல்லும் வாய் - இயன்ற அளவெல்லாம். ஊன்றும்-தாங்கும்.

10. இனையர் - இப்படிப்பட்டவர். இன்னம்-இப்படிப்பட்டோம் (தன்மைப் பன்மை வினையாலணையும் பெயர்). புனையினும்-புகழ்ந்து பேசினாலும். புல்லென்னும்-சிறுமைப் பட்டதாய்த் தோன்றும்.

2. திரிகடுகம்

தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்;
வேளாள னென்பான் விருந்திருக்க உண்ணாதான்;
கோளாளன் என்பான் மறவாதான்; இம்மூவர்
கேளாக வாழ்த லினிது. 1.

தன்னை வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்,—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையும், இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை. 2.

வைததனை இன்சொல்லாக் கொள்வானும், நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும், ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானும், இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார். 3.

ஈதற்குச் செய்க பொருளை; அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை;—யாதும்
அருள் புரிந்து சொல்லுக சொல்லை; இம்மூன்றும்
இருளுலகஞ் சேராத வாறு. 4.

சுக்கு, திப்பிலி, மிளகு, ஆகிய மூன்றும் சேர்ந்த திரிகடுகம் என்னும் மருந்து உடலுக்கு நன்மை பயக்கும். அது போல, ஒவ்வொரு பாட்டிலும் மூன்று நல்ல பொருள்களை வைத்துப் பாடிய 'திரிகடுகம்' என்னும் இந்நூலும் அறிவுக்கு நன்மைதரும். இது நல்லாதனார் இயற்றியது. அவர் கடைச்சங்க காலத்தவர். பதினெண் கீழ்க் கணக்கைச் சேர்ந்தது இந்நூல்.

1. தாள் ஆளன் - முயற்சியுள்ளவன். வேளாளன் - பிறர்க்குதவுவோன். கோள் ஆளன் - (ஆசிரியர் கற்பிப்பவற்றைக்) கொள்ளும் திறமுடைய மாணக்கன். கேள்-நட்பினர்.

2. வியந்து- நன்கு மதித்து. கொன்னே-வீணை, வெகுளி-கோபம். முன்னிய-தான் கருதின. வெஃகும்-அபகரிக்க விரும்பும். படை-ஆயுதம்.

3. கைப்பு-கசப்பு. கட்டி-வெல்லம்.

4. செய்க-சம்பாதிக்கக் கடவன். புரிந்து-அடைய விரும்பி. இருள் உலகம்-நரகலோகம்.

III கதைப் போக்குப் பகுதி

1. பஞ்ச தந்திரம்

1. குரங்கு குருவிக் கூண்டைக் கலைத்த கதை

வீடுடை யவனை வீட்டை யிழந்திடச் செய்வா னென்ன
நாடுறு முதலை யந்த நற்கதை யுரைப்பா யென்ன
நீடுறு குரங்கு சொல்லும் நெடியதோர் பழம ரத்தில்
கூடுகொண் டனவி ரண்டு தூக்கணாங் குருவி தாமே. 1.

குளிரினு னடுங்கி வானக் கொடுமழை யான வைந்து
நளிர்சுரத் தோடு தேகம் நடுங்கியே பற்கள் கிட்டி
வளமறு குரங்கொன் றங்கு வந்தது குருவி பார்த்தே
இளகிய மனத்தி னாலே யின்சொலா லொன்று சொல்
[லும். 2.

கைகள்கா லிருந்து மிந்தக் கன்மத்தை யனுப விக்குஞ்
செய்தியே னென்ன ஊசி மூஞ்சிகொள் சிறிய மூடா
வைதுநீ புத்தி சொல்ல வல்லையோ எனக்கோ பித்து
நெய்நிடு மதன் றன் கூட்டை நெடுங்கையாற் பிய்த்த
[தன்றே. 3.

ஆதலாற் கீழா னோர்கட் காருப தேசித் தாலும்
தீதுறு மென்று சொல்லச் சிஞ்சுமா ரனுமு ரைக்கும்
கோதுடை யேனு னேனுங் கூறுவா யோரு பாயம்
நீதியோ வென்னச் சொல்லு நெடியவா னரத்தின்
[வேந்தே. 4.

—வீரமார்த்தாண்ட தேவர்

பஞ்ச தந்திரத்தை வட மொழியிலிருந்து தமிழில் எழுதியவர் வீரமார்த்தாண்ட தேவராவர்.

1. நளிர்சுரம்-குளிர் காய்ச்சல்.

3. கன்மத்தை - துன்பத்தை. வல்லையோ-வல்லவனோ? முன்னிலை ஒருமை வினைமுற்று.

4. கோது-குற்றம்.

2. வேலையாளின் இயல்பு

கண்ணன்

கூலிமிகக் கேட்பார் கொடுத்ததெலாம் தாமறப்பார்;
வேலைமிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார்;
'ஏனடாநீ நேற்றைக் கிங்குவர வில்லை?' என்றால்,
'பானையிலே தேளிருந்து பல்லாற் கடித்த' தென்பார்;
'வீட்டிலே பெண்டாட்டி மேற்பூதம் வந்த' தென்பார்;
'பாட்டியார் செத்துவிட்ட பன்னிரண்டாம் நா'
[ளென்பார்;
ஓயாமற் பொய்யுரைப்பார்; ஒன்றுரைக்க வேறு
[செய்வார்;
தாயாதி யோடு தனியிடத்தே பேசிடுவார்;
உன்வீட்டுச் செய்தியெல்லாம் ஊரம்ப லத்துரைப்பார்;
என்வீட்டில் இல்லையென்றால் எங்கும் முரசறைவார்;
சேவகராற் பட்ட சிரமமிக வுண்டுகண்டீர்;
சேவகரில் லாவிடிலோ, செய்கை நடக்கவில்லை;
இங்கிதனால் யானும் இடர்மிகுந்து வாடுகையில்.

புதிய வேலையாள்

எங்கிருந்தோ வந்தான் 'இடைச்சாதி நா'னென்றான்;
"மாடுகன்று மேய்த்திடுவேன்; மக்களை நான்
[காத்திடுவேன்;
வீடு பெருக்கி விளக்கேற்றி வைத்திடுவேன்;
சொன்னபடி கேட்பேன்; துணிமணிகள் காத்திடு
[வேன்;
சின்னக் குழந்தைக்குச் சிங்காரப் பாட்டிசைத்தே
ஆட்டங்கள் காட்டி அழாதபடி பார்த்திடுவேன்;
காட்டுவழி யானாலும் கள்ளர்பய மானாலும்
சிரமத்தைப் பார்ப்பதில்லை; தேவரீர் தம்முடனே
சுற்றுவேன்; தங்களுக்கோர் துன்பமுறா
[மற்காப்பேன்;

கற்றவித்தை யேதுமில்லை, காட்டு மனிதனையே!
ஆனபொழு துங்கோ லடிகுத்துப் போர்மற்போர்
நானறிவேன்; சற்றும் நயவஞ் சனைபுரியேன்,"
என்றுபல சொல்லி நின்றான். "ஏதுபெயர்? சொல்"
[என்றேன்.
"ஒன்றுமில்லை, கண்ணனென் பார் ஊரிலுள்ளோர்
[என்னை" என்றான்.
கட்டுறுதி யுள்ளவுடல் கண்ணிலே நல்லகுணம்
ஒட்டுறவே நன்றா வுரைத்திடுஞ் சொல் ஈங்கிவற்றால்
தக்கவனென் றுள்ளத்தே சார்ந்த மகிழ்ச்சியுடன்,
"மிக்கவுரை பலசொல்லி விருதுபல சாற்றுகிறாய்,
கூலியென்ன கேட்கின்றாய்? கூறு" கென்றேன்
[ஐயனே!
தாலிகட்டும் பெண்டாட்டி சந்ததிகள் ஏதுமில்லை.
நானோர் தனியாள் நரை திரைதோன் றாவிடினும்
ஆன வயதிற் களவில்லை, தேவரீர்
ஆதரித்தாற் போதும் அடியேனை; நெஞ்சிலுள்ள
காதல் பெரிதெனக்குக் காசுபெரி தில்லை" என்றான்;
பண்டைக் காலத்துப் பயித்தியத்தில் ஒன்றெனவே
கண்டு மிகவும் களிப்புடனே நானவனை
ஆளாகக் கொண்டுவிட்டேன்; அன்று முதற்கொண்டு

கண்ணன் உண்மையுள்ள வேலையாள்

நாளாக நாளாக நம்மிடத்தே கண்ணனுக்குப்
பற்று மிகுந்துவரல் பார்க்கின்றேன்; கண்ணாற்
பெற்றுவரு நன்மையெல்லாம் பேசி முடியாது;
கண்ணை இமையிரண்டுங் காப்பதுபோல் என்குடும்பம்
வண்ணமுறக் காக்கின்றான்; வாய்முணுத்தல்
[கண்டறியேன்;
வீதி பெருக்குகிறான்; வீடுசுத்த மாக்குகிறான்;
தாதியர்செய் குற்றமெல்லாந் தட்டி யடக்குகிறான்;
மக்களுக்கு வாத்தி, வளர்ப்புத்தாய், வைத்தியனாய்
ஒக்கநயங் காட்டுகின்றான்; ஒன்றுங் குறைவின்றிப்

பண்டமெலாஞ் சேர்த்துவைத்துப் பால்வாங்கி [மோர்வாங்கிப்
பெண்டுகளைத் தாய்போற் பிரியமுற ஆதரித்து
நண்பனாய் மந்திரியாய் நல்லா சிரியனுமாய்ப்
பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்
எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி யென்று [சொன்னான்;
இங்கிவனை யான்பெறவே என்னதவஞ் செய்து [விட்டேன்!
கண்ணன் எனதகத்தே கால்வைத்த நாள்முதலாய்
எண்ணம் விசாரம் எதுவும், அவன்பொறுப்பாய்ச்
செல்வம், இளமாண்பு, சீர்சிறப்பு, நற்கீர்த்தி,
கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம்
தெளிவே வடிவாஞ் சிவஞானம் என்று சொலும்
ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கிவரு கின்றனகாண்!
கண்ணனைநான் ஆட்கொண்டேன்! கண்கொண் [டேன்! கண்கொண்டேன்!!
கண்ணனெனை யாட்கொள்ளக் காரணமும் உள்ளன [வே.

—பாரதியார்

கடவுளை எங்கும் காணும் தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார், கண்ணனை வேலையாளாகக் கருதி, அதிலிருந்து கடவுள் மக்களுக்கு எவ்வாறு உற்ற துணையாய் விளங்குகிறார் என்பதைச் சிறுவரும் உணரும்படி மிக எளிய நடையில் கூறி விளக்குகிறார்.

தாயாதி-பங்காளி. ஊரம்பலம்-ஊர்ப் பொதுச் சாவடி. இடர்-துன்பம். காட்டு மனிதனையே-காட்டு மனிதன் ஐயே! எனப்பிரிக்க. ஐயே-ஐயாவே! ஒட்டுறவே-நன்றாய்ப் பொருந்தும்படியான-(அதாவது) தகுதியான. காதல்-அன்பு. வண்ணம்உற-அழகாக. ஒக்க-ஒத்த. அகத்தே-வீட்டில்.

IV பல்சுவைப் பகுதி

புதுவாழ்வு

அதிகாலை எழுகின்ற
கதிரோன்றன் உறவால்
அலர்கின்ற மலர்போலப்
புதுவாழ்வு பெறுவோம்
புதிதான உணர்வோடு
உலகத்தில் எங்கும்
புலனுரும் கலையாவும்
நிலையாக இங்கும்
விதிகூட வழிவிட்டு
விலகிற்று எனவே
விதமாக விதமாக
விரிகின்ற நினைவால்
இதமாக எல்லோரும்
இனிதாக வாழ்வோம்
என்கின்ற கலைசொல்லும்
மன்றங்கள் சூழ்வோம் 1

மரணத்தில் அஞ்சாத
மனவீரம் வேண்டும்
மனதுக்குள் மருளாத
மதிசாந்தம் வேண்டும்
இரணத்தை எண்ணுமை
எவருக்கும் வேண்டும்

இழிவான மொழிபேசிக்
களியாமை வேண்டும்
திரணத்தின் அளவாக
போகங்கள் எண்ணித்
தேசத்தின் பொதுவாழ்வின்
சேவைகள் பண்ணும்
அரண்ஒத்த நிலையான
அறமின்னும் வளர
அறிவான புதுவாழ்வு
வரவேணும் குளிர. 2

—நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

நாமக்கல் கவிஞர் "சங்கொலி" யிலிருந்து இது எடுக்கப்பட்டதாகும். இக்கவிஞர் நாட்டிற்கும் மொழிக்கும் செய்துள்ள தொண்டு அளவற்றது. இவர் பாடல்கள் எளிமையும் இனிமையும் உடையவை. இவர் இப்போது சென்னை அரசியலாரின் அவைக்களப் புலவராக அமர்ந்துள்ளார்.

1 உணர்வு- அறிவு. புலனாகும்-நன்கு தோற்றமளிக்கும். விதி-முன்னமைப்பு. இதம்-செம்மை.

2 மனவீரம் - நெஞ்சாண்மை. மதி - புத்தி. இரணம்-விழுப்புண். திரணம்-துச்சம் (ஒரு பொருளாகக் கருதாமை). அறம்-ஒழுங்கு நெறி.

2. அழகின் சிரிப்பு

புறாக்கள்

கூட்டின் திறப்பு,,புறாக்களின் குறிப்பு

வீட்டுக்கு வெளிப்பு றத்தில்
வேலன்வந் தேப் பு றாவின்
கூட்டினைத் திறக்கு முன்பு
குடுகுடு எனக்கு தித்தல்
கேட்டது காதில்! கூட்டைத்
திறந்ததும் கீழ்ச்ச ரிந்த
கோட்டுப்பூப் போற்பு றாக்கள்
குதித்தன கூட்டி னின்றே! 1.

புறாக்களிடம் ஒத்துணர்வு உண்டு

இட்டதோர் தாம ரைப்பூ
இதழ்விரிந் திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரையுண் ணும்; அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை; குத்து மில்லை;
வேறுவே றிருந்த ருந்தும்
கட்டில்லை; கீழ்மேல் என்னும்
கண்மூடி வழக்க மில்லை 2.

தாயன்பு; தந்தையன்பு

தாய்இரை தின்ற பின்பு
தன்குஞ்சைக் கூட்டிற் கண்டு
வாயினைத் திறக்கும்; குஞ்சு
தாய்வாய்க்குள் வைக்கும் மூக்கைத்
தாய்அருந் தியதைக் கக்கித்
தன்குஞ்சின் குடல் நிரப்பும்;
ஓய்ந்ததும் தந்தை ஊட்டும் அன்புக்கோர் எடுத்துக்
காட்டாம். 3

"கவிப்பா" என்னும் அமுதோடு "இசையின் சுறியும்" சேர்ந்து சிந்தைக்கும் செவிக்கும் நல் விருந்தாகும் கவிதைகள் பல இயற்றும் இக்காலப் புலவர்கள் வரிசையில் வந்த பாரதி தாசன் என்பார் இதை இயற்றினர். இவர் இயற்பெயர் கனக சுப்புரத்தினம் என்பது. பாரதியார்பால் கொண்ட பேரன்பு காரணமாக "பாரதிதாசன்" என்று வழங்கப்படுகிருர். இவர் தந்தையார் பெயர் கனகசபை முதலியார். இவர் புதுச்சேரியில் 1891-ஆம் ஆண்டு ஏப்ரல்மாதம் 17-ஆம் நாளில் பிறந்தார். இவை அவரியற்றிய 'அழகின் சிரிப்பிலிருந்து எடுக்கப் பெற்றவையாகும்.

1. கோட்டுப்பூ - நால்வகைப் பூக்களில் கிளைகளில் மலருவது.

2. கண் மூடி வழக்கம் - குருட்டுப்பழக்கம் (பகுத்தறிவு கலவாத செய்கை).

—— ——